Registered No. M. 120.

ओं.

# JNÂNA BODHINI

## A TAMIL MAGAZINE AND REVIEW

DEVOTED MAINLY TO

LITERATURE, SCIENCE, PHILOSOPHY & RELIGION

EDITORS:

M. S. PURNALINGAM PILLAI, B.A.

V. G. SURYANARAYANA SASTRI, B.A.

Vol. V. No. 4.—November 1901.

CONTENTS.

Poverty and Tamil Scholarship.... Editors.................. 121
Tiruvalluvar...................... T. Chelvakesavaroya Mudaliar, M.A... 124
Mrichchhakatika.................. T. S. Narayana Sastriar, B.A., B.L... 130
'There is nothing new under the Sun'......................... C. R. Srinivasa Aiyangar, B.A... 136
South Indian History............ S. K. Varadachari...... 138
An Adaptation of Addison's Vision of Mirza...................... N. Balarama Aiyar..... 145
Radharani: A Novel.............. T. A. Swaminatha Aiyar. 149
Curtain Lectures: Second Night.. J. P. Vasudevaiya Pantulu 151
CORRESPONDENCE.......................................... 153
REVIEWS OF BOOKS........................................ 154
EDITORIAL NOTES......................................... 156

*Madras:*

THOMPSON AND CO.,

33, POPHAM'S BROADWAY.

1901.

# JNANA BODHINI

**Terms of Subscription.**

**Annual Subscription including postage Rs.... 2 8 0**

**N.B.**—The year begins with August, and subscriptions are not accepted for broken periods. New subscribers joining in the course of the year, will as far as possible be supplied with the back numbers of the current volume.

## TO ADVERTISERS.

**The Jnana Bodhini** affords the best and cheapest medium for advertising. It reaches all classes of people and commands the largest monthly circulation. Rate per page per insertion. Rs. 5. Apply to Messrs. Thompson & Co., Publishers, Broadway, Madras.

*All literary contributions and books for Review and business letters, &c., should be addressed to T. A. Swaminatha Aiyar, Manager, The "Jnana Bodhini" Office, Black Town, Madras. All remittances should be made payable to Messrs. Thompson & Co., Publishers of "Jnana Bodhini," Broadway, Madras.*

## அறிக்கை.

**காரியஸ்தர்கள் தேவை.**

"ஞானபோதினி"ப் பத்திரிகையைப் பலவிடங்களில் பரவச்செய்து சந்தாத்தார்கள் சேகரித்து அனுப்பக்கூடிய காரியஸ்தர்களுக்குத் தக்க கமிஷன் கொடுக்கப்படும். விவரந் தெரியவேண்டுவோர் "ஞானபோதினி" மானேஜருக்கு எழுதிக்கொள்க.

கோயமுத்தூர் இலாகாவுக்கு மகா-ள-ள-ஸ்ரீ சோமசுந்தர முதலியாரவர்களைக் காரியஸ்தராக ஏற்படுத்தியிருக்கிறோம்.

(மானேஜர்.)

## புதிய நூல்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1. ரூபாவதி ... | 1 | 0 | 0 |
| 2. கலாவதி ... | 1 | 8 | 0 |
| ஷை கலிகோ ... | 1 | 12 | 0 |
| 3. சரசாங்கி ... | 1 | 0 | 0 |
| 4. சுகுணசுகேசர் ... | 0 | 8 | 0 |
| ஷை கலிகோ ... | 1 | 0 | 0 |
| 5. தசரதன் தவறு ... | 0 | 4 | 0 |
| ஷை கலிகோ ... | 0 | 8 | 0 |
| 6. உஷா பரிணயம் ... | 0 | 8 | 0 |
| 7. நாடக வியல் ... | 0 | 8 | 0 |
| 8. தனிப்பாசுரத்தொகை | 0 | 4 | 0 |
| ஷை கலிகோ ... | 0 | 8 | 0 |
| ஷை ஆங்கில மொழி பெயர்ப்புடன் ... | 1 | 0 | 0 |
| 9. பாவலர் விருந்து (முதல் நாள்)... | 0 | 8 | 0 |
| ஷை கலிகோ ... | 1 | 0 | 0 |
| 10. தாமரை நாண்மலர் .. | 0 | 6 | 0 |
| ஷை கலிகோ ... | 0 | 12 | 0 |
| 11. வித்தியாரண்ய நகரம். | 0 | 8 | 0 |
| 12. நன்றியறியா மகன் .. | 0 | 8 | 0 |
| 13. பாரத ஸாரம் (முதற் பாகம் ... | 0 | 10 | 0 |
| ஷை கலிகோ ... | 1 | 0 | 0 |
| 14. வர்ண வைத்திய சாஸ்திரம் ... | 0 | 8 | 0 |
| 15. மச்சபுராணம் (செய்யுள்) கலிகோ ... | 2 | 8 | 0 |
| 16. திருமுல்லைவாயிற்புராணம் (கலிகோ) ... | 0 | 10 | 0 |
| ஷை (மார்பில்) ... | 0 | 8 | 0 |
| 17. செய்யுட்கோவை (கலிகோ) ... | 0 | 13 | 0 |
| ஷை மார்பில் ... | 0 | 10 | 0 |
| 18. விவேக விளக்கம் ... | 0 | 4 | 0 |
| 19. வாசகத்திரட்டு ... | 0 | 10 | 0 |
| 20. நகைப்பைத்தியம் (முதற்பாகம்) ... | 0 | 8 | 0 |
| ஷை (இரண்டாம்பாகம்) | 0 | 8 | 0 |
| 21. ஸ்ரீராமாநுஜசரிதம். | 0 | 8 | 0 |
| 22. ஔவைகுறள் மூலம். | 0 | 2 | 0 |

இந்நூல்களெல்லாம் சென்னை **ஆரியன் புக் டெபோவிலும், தாம்ஸன் கம்பெனியாரிடத்திலும்,** அகப்படும்.

# ஞானபோதினி

## ஒரு மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

---

தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்—திருக்குறள்.

சம்புடம் V. } 1901ஆம் நவம்பர்மீ 20உ {புத்தகம் 4.

### விஷயங்கள்.

வறுமையுந் தமிழ்ப்புலமையும்.—பத்திராதிபர் ... 121
திருவள்ளுவர்.—திருமணம் - செல்வகேசவராய முதலியார், எம். ஏ., ... 124
மிருச்சகடிகை.—த. ச. நாராயண சாஸ்திரியார், பி.ஏ, பி.எல். 130
'கதிரொளிக்கீழ்ப் புதுமையில்லைகாண்'.—கு. ரா. ஸ்ரீநிவாச ஐயங்கார், பி.ஏ. 136
தென்னிந்திய சரிதம்.—சருக்கை-கி. வரதாசாரியர் ... 138
மரீசிகண்ட பாவனைக்காட்சி.—ந. பலராம ஐயர் ... 145
இராதாராணி.—கி. அ. ஸ்வாமிநாத ஐயர் ... 149
பள்ளியறைப் பிரசங்கம்.—ஜக்கராஜு. ப. வாசுதேவைய பந்துலு ... 151

கடிதம்.—
புத்தகக் குறிப்புக்கள்.—
பத்திராதிபர் குறிப்புக்கள்.—

---

பத்திராதிபர்:— { எம். எஸ். பூர்ணலிங்கம் பிள்ளை, பி. ஏ.
வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், பி. ஏ.

---

சென்னை:
தாம்ஸன் கம்பெனியார்
பதிப்பிப்பது.

1901.

வருஷ சந்தா ரூ. 2—8—0] [சஞ்சிகை ரூ 0—4—0

ந்த பாவலர் ஒருவருமிலர் என்பதும் நாம் நன்கறிவோம். பண்டை நாட்
கவிச்சுவையெல்லாம் வாரிக்கொணர்ந்து ஓரிடத்தே பொதிந்து, இற்றை
நாட்கவிராயரெல்லாம் கொள்ளைகொள்ள வைத்த கவிச்சக்கிரவர்த்தியை
யும், அவர் கவித்திறத்தையுஞ் சுட்டிச் சிலவாண்டுகளுக்கு முன்னே ஒரு
சங்க முன்னிலையிற் சிறிதெடுத்துரைத்தேன். வேட்டவேட்ட பாவலரும்
பாவலரும்வேணவா அடங்க அள்ளிக்குடிக்கும் ஊற்றுக்குழியான உத்தர
வேதத்தையும், அதனை உரைத்தருளிய திருவள்ளுவரையுஞ்சுட்டி, எனக்
குத் தாயகமான இவ்விராசதானிக் கல்லூரியின் தமிழ்ச்சங்க முன்னிலையில்
இவற்றை என்னுலியன்றதை எடுத்துரைப்பான் வந்தேன்.

செப்பலோசையைத் தழுவி, முதலடி நாற்சீராயும் ஈற்றடி மூச்சீரா
யும், ஒருவிகற்பத்தானும் இருவிகற்பத்தானும் வருகிற ஈரடிவெண்பாக்குறள்
வெண்பா எனப்படும். இது குறள் எனவும் வழங்கும். கலிப்பாவாற்றொகு
த்த நூல் ஆகுபெயரிலக்கணத்தாற் கலியென வழங்குமாறுபோலக் குறட்
பாவானியன்ற நூல் குறள் என வழங்குவதாயிற்று. திரு என்பது அழகு
என்னும் பொருட்டு. திருக்குறள் என்பது அழகிய குறள் எனறவாறு. ஆக
வே நூற்பெயரான திருக்குறள் என்பது அடையடுத்த வாகுபெயராம்.
இது முற்காலத்தில் ஆசிரியர் பெயரால் திருவள்ளுவர் என்றும், திருவள்
ளுவரால் இயற்றப்பட்டு எல்லார்க்கும் எல்லாப்பயனையும் அளித்தலின் திரு
வள்ளுவப்பயன் என்றும் வழங்கியது. சங்கப்புலவரிற் பதின்மூவர் இதனை
முப்பால் எனச் சிறப்புப்பாயிரம் உரைத்தனர். பதினெண் கீழ்க்கணக்கை
இன்னவென்றியம்பும் பழம் பாட்டும் இதனை முப்பால் என்றே உரைக்கின்
றது. சிலர் இதனை வள்ளுவர் வாய்ச்சொல் என்றும், வள்ளுவர் வாய்
மொழி என்றும் வழங்கினர். தெய்வநூலென்றும், பொய்யாமொழியென்
றும், வாயுறை வாழ்த்தென்றும், தமிழ் மறையென்றும், பொதுமறையென்
றும் ஒவ்வொருவர் புனைந்துரைத்தனர். ஆயினும் இந்நூல் நெடுநாளாகத்
திருக்குறள் என்று வழங்கிவருகின்றது. மாணவர்கட்குத் தமது நூலை
உபதேசிக்கும் உருவமாகப் பிரதிட்டிப்பித்திருக்கும் திருவள்ளுவருடைய அர்
ச்சை விக்கிரகத்தில் இடது கையில் ஏட்டுச்சுவடி பிடித்திருப்பதாகக் காட்டி
அதன் மேல் திருக்குறள் என்ற பெயர் செதுக்கியிருக்கின்றது.

திருவள்ளுவருடைய திருவுருவத்தின் தோற்றப் பொலிவை அறிய
அவாவுகின்றவர்கள், திருமயிலையில் அவருடைய திருவாலயத்திற்குச் செல்
வாராக.

"திருமுடி மிசையார் மயிர்முடி யழகும் தீர்க்கபுண் டரநுத லழகுந்
திரண்மணி புயந்தை வருஞ்செவி யழகுந் திகழ்நெடுந் தாடியி னழகு
மருமுடி செபமா லிகைசின்முத் திரைசே ரபயநோர் வலக்கையி னழகு
மமிழ்துறழ் தமிழ்மா மறைமுறை வாத மமைதரு மிடக்கையி னழகும்

கருமுடி யோசப் பட்டையி னழகுங் கடிகொள்கீட் கோவண வழகுங்
கழல்களிற் றிகிரி வளைவரை யழகுங் கமலநல் லாதனத் தழகுந்
தருமுடி முகிறேய் மயிலையி னிடைமா தவர்கள்கண் டிறைஞ்சவீற் றிருக்குந்
தலைழபுகழ்த் திருவள் ளுவரெனு நாம சற்குரு சரணமே சரணம்"

என்கிற ஸ்வரூபஸ்துதியிற் கூறியபடியே, தலையிற் சடையை முடித்திருக்கும் முடியினழகும், அடர்ந்த மீசையினழகும், அலைந்து மார்பிற் புரள்கின்ற தாடியினழகும், அகத்தினழகைக் காட்டுகின்ற முகத்தினழகும், ஆஜாநுபாகுவாய் அகன்ற மார்பையுடைய தேககாத்திரமும், காணபவர்க்கு, யூரோப்பியரிற் சிறந்த ஞானவான்களான ஸாக்கிரெடிஸ், ப்ளேடோ என்பவரை நினைவூட்டுகின்றனவாய் இருக்கின்றன. வலக்கையில் ஜபமாலிகையும் இடக்கையில் தமிழ் மறையுமாகக் கமலாசனமிட்டு வீற்றிருப்பதைப் பார்த்தால் அகத்தியர்க்கு இரண்டாவராக எண்ணத்தக்க தமிழ் முனிவரோ இவர் என்று தோன்றும். தமிழ்ப்புலவர்கள் இவரை அகத்தியனுருடைய பௌத்திரராகவே வமிசாவளி வரையறுத்துக் காட்டுகின்றனர்.

மதியூகிகளான சில தமிழாசிரியருடைய தற்கால ஆராய்ச்சியாலும் சிலப்பதிகாரம் மணிமேகலை யென்னும் பெருங்காப்பியங்களிற் கிடைக்கலான ஆதரவுகளாலும் பிறவாற்றாலும் திருவள்ளுவர் ஏறக்குறையச் சாலிவாகன சகாப்தத்தின் தொடக்கத்தில், அதாவது கி. பி. முதனூற்றாண்டில் இருந்தவரென்பது துணியப்படுகின்றது. இன்னும் முற்பட்டவர் எனத்துணிந்துரைத்தற்கான ஆதாரங்கள் அகப்படவில்லை. ஆயினும் இன்றளவும் நின்று நிலவுதலான தமது நூலை வள்ளுவனார் வரையறுத்து வகைப்படுத்திக்கொண்டு, மயிலைமாநகரிலே உதர நிமித்தமாகத் தமது தறியின்மேல் தலைகுனிந்து சீலை நெய்யாநிற்கையில், அயிரோப்பியருடைய அந்தகார காலம் அப்பாற்பட்டதில்லை, மத்திய காலமும் உதயமாயிற்றில்லை ; துருக்கருடைய மகம்மதியமதம் தோன்றிற்றுமில்லை. கிறிஸ்தவமதம் அப்போது தான் முளைகிளம்பிக் கொண்டிருந்தது. இந்தியாவிலும் சைவம் அத்துவிதம் வைணவம் என்னும் சமயபேதங்களுக்குரிய சமயாசாரியர்கள் எல்லாரும் வள்ளுவனார்க்கு நெடுங்காலம் பிற்பட்டு அவதரித்தவர்கள். வள்ளுவர் காலத்தில் தமிழ்நாடு பேரும் புகழும் அடைந்து உச்சதசை உற்றிருந்தது. மேலும் தமிழ் நாடானது வடக்கிலும் குடக்கிலும் குணக்கிலும் உள்ள பலதேயத்தவரும் வந்து வாணிகஞ்செய்யும் பெரிய வியாபாரஸ்தானமாகவும் இருந்தது. அதற்கு நெடுங்கால முன்னரே ஆரிய பிராமணர்கள் திராவிட தேசத்திலே குடியேறி நிலை பெற்றும், தமிழ் நாட்டு மூவேந்தரிடத்திலும் அமாத்தியரும் புரோகிதருமாக உத்தியோகித்தும், ஆலயங்களில் அர்ச்சகராக அமர்ந்தும், ஆரியக்கோட்பாடுகளை ஆங்காங்குப் பரவுவித்தும் இருந்தனர். அக்கால

த்துக் கல்விச்சங்கமான கடைச்சங்கமும் மதுரையில் நன்கு நடந்துவந்தது சேரசோழ பாண்டியர்களுடைய பிரதான பட்டணங்களிலே சைவ வைணவ ஆலயங்களுக்கு அணித்தாக ஜைனபௌத்த ஆலயங்களும் விளங்கியிருந்தனவென்று அக்காலத்திலக்கியங்கள் சான்று பகர்கின்றன. இக்காலத்தில் மறக்கலான இந்திரனுக்கும் பிரமனுக்கும் அக்காலத்தில் ஆங்காங்கு ஆலயங்கள் உண்டு. அக்காலம் சமய வேறுபாடுகளில் க்ஷாத்திரம் சாதிப்பதில்லையாய், அவரவர் இராஜபயமின்றித் தத்தமது வழிபடுகடவுளை நிர்ப்பயமாக வணங்கி வந்த காலமாகக் காணப்படுகின்றது. பிரபுக்களும் வீரரான வள்ளல்களும் அரசர்களும் அரிய புலவரை ஆதரித்துவந்தனர். கவிதாசிருஷ்டி எங்கும் பரந்திருந்தது. கல்வித்துறை மாத்திரமேயன்றிச் சிற்ப முதலான சித்திரவேலைகளும் வெகுவாய்ச் சன்மானிக்கப்பட்டு வந்தன. நீராவியந்திரம் அச்சியந்திரம் மின்சாரவிநோதம் என்பன தவிர ஏனையெவ்வாற்றானும், அக்காலமானது நனிநாகரிகத்தான் மேம்பட்ட இக்காலத்துக்குப் பிரதிசாயலென்று உரைக்கத்தக்க காலமாகவே இருந்தது.

இன்னோரன்ன காலத்தில் இன்னோரன்ன நாட்டில், கர்ண பரம்பரையில் வழங்குமாறு, திருமயிலையில், ஆதிபகவன் என்பவருடைய மக்கள் எழுவரில் இறுவராய்ப் பிறந்தார் நமது திருவள்ளுவர். இவரைப்பற்றி வழங்கிவருகிற சரித்திரம் முற்றும் புலவர்களில் வழங்கிவருகின்ற கர்ண பரம்பரையேயாதலின், இதிற் கொள்ளற்பாலதிதுவென்றும், தள்ளற்பாலதிதுவென்றும், துணிவது கூடாத காரியமாக இராநின்றது. "கன்னன் பிறப்பும் பின்னுளிற்றுலங்கிற்றுக் கம்பன்பிறப், பின்னந் தெரிந்தார்களில்லையில்லை முக்காலுமிது மெய்யே" என்ற புலவர் புராணம், ஆதிபகவனாலே திருமயிலையில் விடப்பட்ட இவரை மகப்பேறில்லாத வேளாளன் ஒருவன் கொண்டுபோய் வளர்த்து, வாசுகியென்னுமோர் பெண்ணை மணஞ்செய்வித்துக், காலகதி அடைந்தனனென்றும், இவருடைய மனைமாட்சி வசிட்டருடைய மனைமாட்சியோடொத்ததென உலகினர் பேசி வந்தனரென்றும், இவர் "ஊரிலுள்ளவரொடு வாழாமல் ஊர்ப் புறஞ்சேர்சார்ந்து, தெள்ளு சொற்புலமை வாய்ந்து சேலைநெய்திருந்தவாற்றால், வள்ளுவரென்றார் பல்லோர் வளமையோனென லோராரே" யென்றும் உரைக்கின்றது. இன்னும் அப்புராணம் "பாதிவான்மதிவாழ்சென்னிப் பரமனே பரமென்றோர்ந்து, சோதிடமாதிநூல்கள் தூயனவாகச்சொல்லி, நீதிமுற்றுணர்த்தும் பெட்பால் நிகமமேயிதுவாமென்னத், தீதின்மெய் யறிஞர் போற்றத் திருக்குறணூலுஞ் செய்தான்" என்றும் இயம்புகின்றது. இப்புராணத்திற் கூறும் ஏனைவரலாறெல்லாம் கர்ணபரம்பரையை ஒத்தேயுள்ளன. ஆயினும் வள்ளுவனாரை "இல்லறமென்னும் பொன்னுக் கியலுரையாணி" என்றும், இவர் நூலின் ஏற்றத்தைச் சமயவேறுபாடின்றி,

"நால்வர்சொல் சைவர் வேதம் நளிர்குரு கூரன் சொல்லைப்
போல்வலார் சிலர்தாஞ் சொல்லும் பொருவில்பா கவதர் வேதம்
வால்வளை யுலவும் வீதி மயிலைவள் ளுவன்சொல் யார்க்கும்
மேல்வழி யுணர்த்திக் கீழ்மை விலக்குநல் வேத மாமே."

அஃதாவது, சைவசமயாசாரியர்கள் அருளிய தேவார திருவாசகங்களும் வைணவ ஆழ்வார்கள் அருளிச்செய்த நாலாயிரப் பிரபந்தமும் வள்ளுவர் குறளும் உலகினர்க்குக் கீழ்மையை விலக்கி மேல்வழியை உணர்த்தும் நல்ல வேதங்களாம் என்றும், இவர் நூலில் உரைத்த தருமங்களிற் சொலை மறுத்தலே முக்கியமான தருமம் என்பதைக்குறித்து,

"இந்திர பதவிக் கேற்று மிவுளியா கமும்பொல் லாதென்
றுந்திய கருணை வாய்ந்தோர்க் குறுதியுண் டாகத் தோற்றும்
சந்திர வதனத் தாதி தருமகா ரெழுவர் தம்மிற்
பிந்திவள் ளுவப்பேர் தாங்கும் பெரியவன் பேசு நூலே"

என்றும்,

"பறந்த வோதிமப் புள்ளிறை யாதியர் பகர்ந்தசொற் குறித்தேனு

மிறந்த வூனுமுண் பதுதகா தென்பதே யியற்றமிழ் மறைக்கோளே"

என்றும் அப்புராணம் புகல்கின்றது.

இனி இவருடைய திருநாமத்தைப்பற்றி மேற்கூறிய புலவர் புராணம் வளமையோன் என்று கூற அறியாத பாமரர்கள் வள்ளுவன் என வழங்கி விட்டனரென்று கூறுவது கண்டோம். திருவள்ளுவ மாலைக்கு உரையியற்றிய திருத்தணிகைச் சரவணப் பெருமாளையர் "வள்ளுவர் என்பது வண்மையையுடையவர் என்பதை விளக்கி நின்றதாகலின், அது வேதத்தில் இலைமறை காய்கள்போற் பல விடங்களினும் மறைந்து வெளிப்படாதிருந்த மெய்ப்பொருள்களையெல்லாம் தொகுத்து உலகத்தாருக்குக் கொடுத்தருள் செய்தவர் என்னுங் காரணம்பற்றி வந்த பெயராயிற்று" என்றனர். கபிலர் இயற்றிய அகவலில் "தொண்டைமண் டலத்தில் வண்டமிழ் மயிலைப், பறைய ரிடத்தில் வள்ளுவர் வளர்ந்தனர்" என்றுரைத்திருக்கின்றது. திருக்குறள் கலாரத்நாகர அச்சுக்கூடப்பதிப்பில் திருவள்ளுவமாலையின் அநுபந்தமாக வைத்திருக்கிற திருவள்ளுவர் வரலாற்றை யுரைக்கும் அகவலில் "மைப்புய லணிபொழின் மயிலாப் பூரில், வள்ளுவர் மனையிடை வள்ளுவர் வளர்ந்தனர்" என்று கூறியிருக்கின்றது. பிங்கல நிகண்டில் "வள்ளுவன் சாக்கை யெனும்பெயர் மன்னற், குள்படு கருமத் தலைவற் கொன்றும்" என்றும், பிற்பட்ட சூடாமணி நிகண்டில் "வருநிமித் திகண் பேர் சாக்கை வள்ளுவ னென்று மாகும்" என்றும் வருவது முறையே கன்மத்தலைவன் ஜோசியன் எனப்பொருள் படுகின்றதாயினும், உலக வழக்கில்

கி. பி. 1678-ஆம் வருஷம் வரையில் இரண்டாவதும், அவ்வருஷம் முதல் ஆங்கிலத் தலைமை நிலை நிறுத்தப்பட்ட வரையில் மூன்றுவதுமேயாம்.

## முதற்பகுதி (ஆதிமுதல் கி. பி. 1310 வரை.)

தென்னிந்தியாவில் நமக்குத் தெரிந்தனவற்றுட் பழைய அரசுகள் பாண்டிய சோழ சேர (அல்லது கேரள) ராச்சியங்களே. இவை கி. மு. மூன்றும் நூற்றுண்டி லிருந்தன போலும். **பாண்டியர்** இந்தியாவின் தென் பாகமாகிய மதுரை திருநெல் வேலி, தென்றிருவாங்கூர் ஆகிய ஜில்லாக்களையும், **சோழர்** கீழைத் தொடர்மலைக்கும் மதுரை முதல் தென்பெண்ணையாறு வரையிலுள்ள கடற்கரைக்கும் நடுவிலிருக்கும் நாட்டையும், **சேரர்** வடதிருவாங்கூர், கொச்சி, மலையாளம், தென்கன்னடம் ஆகிய இடங்களையும் ஆண்டனர். அப்பொழுது சென்னை இராசதானிக்கு வடக்கில் ஆண்டவர் **ஆந்திரர்** என்பர். அவர் கிறிஸ்துசகந் தொடங்கிய காலத்தில் மிகவும் வல்லவராயிருந்தனர். கிருஷ்ணுநதிக்கு வடக்கிலுள்ள உள்நாடனைத்தும் அவரைச்சேர்ந்ததே. ஆந்திரபல்லவ ராச்சியங்களுக்கு இடையிலிருந்தநாடு குடியற்ற பாழ்ங்காடா யிருந்ததுபோலும். **பல்லவ** தேயம் பெண்ணையாறுமுதற் கலிங்கநாட்டுத் தென்னெல்லை வரையிலும் வியாபித்துச் சேலத்தின் வடபாதியோடு பலமனேரி, கோலாறுவரையிலுள்ள பாலாற்றுப்பாய்ச்சல் முழுவதூஉம் அணைத்தது. ஏறக்குறைய ஒன்பதாம் நூற்றுண்டுமுதற் சோழர் கருவூர்முதல் மேற்கே மைசூர்வரையிலிருந்த கொங்கு ராச்சியத்தைச் சயித்துச் சேர்த்துக்கொண்டு, விரைவில் அழிந்தகொண்டிருந்த கோதாவரியாற்றுக் கழிமுகத்தின் எதிர்நிலத்திருக்கும் சாளுக்ய ராச்சியர்வரை அழித்துத் தந்தேயத்தை மேற்கிலும் வடக்கிலும் பரப்பினர், இப்பொழுது வழங்கும் பாரம்பரியங்களின்படி முற்காலத்து மிக வன்மையடைந்தவோர் அலைந்துதிரியுஞ்சாதியின் கிளையாகிய **குறும்பரென்பவர்** நாளாவர்த்தியிற **பல்லவ**ரென்ற பெரியஜாதியாராகக் கிளம்பினர். இந்தச்சாதியார் பூர்வகாலத்திலேயே தென்னிந்தியாவில் தலைமையடைந்தனர். இவர்களின் வன்மை மிக அதிகமாயிருக்கும்போது, முற்கூறிய பல்லவதேய மனைத்தினையும் இஃதணைத்தது. பூர்வகிரேக்க ரோம நூலாசிரியர் **கலிங்கா**னவம்சத்தையும் அச்சாதியையும் பற்றிக்கூறுகின்றுராதலின் அவ்விராச்சியம் முற்காலத்தில் மிக்க வன்மையும் சுவாதீனமுமடைந்ததென்று தோன்றும். சனங்கள் தூரதேசங்கட்கு வெகுநாட்பிரயாணஞ் செய்யத்தொடங்குந்துணிவுள்ள கடல் வியாபாரிகள். சில்லாண்டுகள் கழித்து அவர் தேயத்தின் தென்பாகங்களைப் பல்லவராண்டனர். கடைசியில் ஏறக்குறையக் கி. பி. 1000-ஆம் வருஷத்தில் அவர் நாடுமுழுவதூஉம் அவரினும் வன்மையின் மிக்க அயறேயத்தார் பிடுங்கிக்கொண்டனர். முதன் முதலில் நாகரிகமடைந்தது **பாண்டிய** ராச்சியமே. சோழர் முதன்மையெய்திய வரையில்

தென்கோடியில் அஃதே தலைநாடாயிருந்தது. இச்சோழர் பதினோராம் நூற்றாண்டில் இதுகாறுந் தென்னிந்தியாவில் யாமறியாததோர் மேனிலை யடைந்தனர். இப்பருவத்திற் போர்களினாலும் படை யெடுப்புக்களினாலும் புதப்புதுச் சாதிக ளுண்டாதலினாலும் அவர் அதிகார நிலை அடிக்கடி மாறிற்று. அதனாற் பதினோராம் நூற்றாண்டின் தொடக்கத்தில் விஷயங்களின் நிலைமை வேறோருருக்கொண்டது. அஃதாவது :—பாண்டிய சோழ சேர ராச்சியங்கள் தம் முன் சுவாதீனத்தினை யிழவாதிருந்தன; ஆனாற் பிற் கூறியவருடைய வட எல்லையில் **ஆயசால வல்லாளர்** அடிக்கடி எதிர்த்தன ராதலின் அவர் மிகத்துன்ப மடைந்தனர். அவ்வல்லாள ரென்பார் **மேலைச் சாலூக்கியருள்** ஒரு பிரிவினர்; மைசூரில் ஸ்தாபிக்கப்பட்டிருந்து விருத்தியடைந்து வரும் யாதவ குலத்தினர். **சாலூக்கியரோ** நிஜாம் ராஜ்ஜியத்திற் **கல்யாணபுரியிற்** கருகி லிருந்ததோர் இராஜ புத்திர சாதியார். இவர் தந்தேயத்தைப் பரப்பிக் கீழைக் கடற்கரையை நோக்கிப் படை யெடுத்துச் சென்று பல்லவதேயத்தின் வடபாகங்களைச் சயித்தனர். பின்னர் அவர் தென்னிந்தியாவின் மேற்கில் தந்நாட்டினுள் வசித்த **மேலைச்சாலூக்கிய**ரென்றும், பல்லவரிடமிருந்து பிடுங்கிக்கொண்ட கிருஷ்ணா கோதாவரி நதிகளினடுவிலிருந்தநாட்டிற் குடியேறிய **கீழைச் சாலூக்கிய**ரென்றும இருபிரிவின ராயினர். கி.பி. 1064-ஆம் வருடத்திற் சோழராச்சியத்தையும் கீழைச்சாலூக்கிய ராச்சியத்தையும் சேர்த்து **இராஜேந்திரசோழ**னென்பான் ஆண்டனன், அவன் தந்தை யொரு சாலூக்கிய ராச குமாரியை மணந்தனனாதலின். இதன்பின் இலங்கையும் பல்லவ பாண்டிய தேயங்களும் சயிக்கப்பட்டன. கடையிற் கூறிய நாட்டிற் சோழபாண்டிய ரென்றதோர் சிறுவம்சத்தரசர் ஆண்டனர். சின்னாட்பின்னர் ஆயசாலவல்லாளர் தந்தேயத்தை யினனும் விஸ்தாரமாக்கிக்கொண்டனர். கி. பி. 1310-ஆம் வருடத்தில், தென்னிந்தியாவின்மேல் மகம்மதியர் முதன்முதற் படையெடுத்துவந்து அதன் பழைய வம்சங்களை வேரோடறுக்கத் தொடங்கி அவர் ஜயத்தினைக் குறைத்திராவிடின் ஒருவேளை அவர் சமதிலங்களிலிருந்த பூர்வ சாதியாரையும் வென்றிருப்பார்.

முன் சொல்லிய முக்கியமான இராச்சியங்களைப்பற்றி யின்னுஞ் சில விஷயங்கள் இனியனவாயிருக்கலாம். அவை பின்னர்க் கூறப்படும்.

**பாண்டியர்** :—இவ்வம்சத்தைப் பாண்டியனென்ற ஒருழவன் நிலை நிறுத்தினனென்பது கூறப்பட்டுளது. அக்குலத்தரசர் மீன்குறி யுடையவ ராதலின் அவருக்கு மீனவரென்றும் பெயர். முதன்முதலிற் றலைநகராயிருந்தது திருநெல்வேலி யாற்றின் கழிமுகத்தின் அருகிலிருக்குங் **கொற்கை**யென்பதே. ஆனாற் சிலநாளிற் கன்னியாகுமரிமுனையினுக்கருகிலிருக்கும் **கல்யாணநகரம்** தலைமைப்பட்டணமாய்க் கடைசியில் **மதுரைக்கு** அப்பதவியினைக்

கொடுத்துவிட்டது. **மேகாஸ்தினீஸ்** என்பவர் பாண்டிய நாட்டினுக்குப் **பண்டையநா** டென்ற பெயர்கொடுத்து மதுரையையும் அதன் அரசனையும் பற்றிக் கூறியிருக்கின்றார். மதுரைக்கோயிலின் சமயச் சார்பான கதைகளிலோரட்டவணை கொடுக்கப்பட்டுளது. அது பெரும்பாலும் நம்பத்தக்கதன்று. 1064-ஆம் வருடத்தில் **இராஜேந்திர குலோத்துங்க சோழன்** படையெடுத்துவந்தவரையில் 73 பாண்டியராசர் ஆண்டனரென்று அது கூறுகின்றது. ஆனால் மதுராபுரியைப் பலப்படுத்திப் பெரிதாக்கி ஆண்டுப் பெயர்பெற்ற தமிழ்ச்சங்கத்தைஸ்தாபித்த **வம்சசேகரபாண்டியனைப்**பற்றி யாமறிந்தாற்போதும். **மூதற்சோழபாண்டியன்** உயிர்துறந்தபின் 1100-ஆம் வருஷம் வரையிற் சிலநாள் அரசாளுகையின்றியிருந்தது. அவ்வருஷம் முதல் நாற்பத்தொருவர் கொண்டமேதோர் வம்சத்தார் ஆளத்தொடங்கினர். அப்பொழுது நடந்த முக்கிய காரியங்களாவன சோழரோடனேக சண்டைகளும் சமாதானங்களும், 1701-ஆம் வருஷத்தில் நாட்டின்மேற் படையெடுத்துவந்த இலங்காபுரிவரசனாகிய **மூதற்பராக்கிரம பாஹு**-வின் வென்றியும், கடையில் 1310-ஆம் வருஷத்தில் மகம்மதியத்தலைமையும் பாண்டியரழிவுமேயாம்.

**சோழர்** :—சோழராச்சியமும் பாண்டிய வம்சத்தினும் பூர்வீகமானது. ஆனால் 1023-ஆம் வருஷத்திற்கு முன் அதன் சரித்திரம் ஒருவருக்குந் தெரியாது. கி. மு. மூன்றாம் நூற்றாண்டில் வட இந்தியாவில் மகத நாட்டினையாண்ட **அசோகன்** எனபவன் அதற்குச் **சோடராச்சிய**மென்று பெயர் கொடுத்துத் தன் கட்டளைகளுள் அதைப்பற்றிக்கூறியிருக்கின்றான். இரண்டாம் நூற்றாண்டிற்சோழர் தலைநகர் **உறையூர்**. ஏழாம்நூற்றாண்டிற் **கும்பகோணம்**. பத்தாம்நூற்றாண்டில் **தஞ்சை**. முதன் முதலிற் பாண்டியரோடு இடைவிடாது போர் புரிதலே யிவர் செய்கையா யிருந்தது. ஆனால் அதன்பின் அவர் தங்கவனததைக் **கொங்குராச்சியத்தின்**மேற் செலுத்தி அவரைக் கி. பி. 900-ஆம் வருஷத்திற் றொலைத்தனர். சிங்களக் கதைகள் சோழர் கிறிஸ்துசகந் தொடங்கு முன்னர் இலங்கையைச் சயித்ததாகவும் அதனை 44 வருஷம் ஆண்டதாகவுங் கூறுகின்றன. 10-ஆம் நூற்றாண்டில் இன்னொரு முறை படையெடுத்ததாகவும் அதிற்றோற்றதாகவும் எண்ணப்படுகின்றது. **இராஜராஜ சோழன்** தன்மனைவி காரணமாகக் **கலிங்க வெங்கிதேயங்களாகிய கீழைச்சாளுக்கிய** நாட்டினைத் தன் மகனுக்குச் சேர்த்து வைத்தனன். 1059-ஆம் வருஷத்தில் இவ்வரசன் இலங்கைமேற் படையெடுத்துச் சென்று **மிஹிந்துராசனை**யும் அவன் மனைவியையுஞ் சிறைப்படுத்தி முடியணிகளைக் கைப்பற்றிக்கொண்டு ஒருசோழப் பிரதிநிதியை யாளும் பொருட்டு வைத்தான். அவன்பின் வந்த **குலோத்துங்கன்** முதலாவன் அல்லது **இராஜேந்திர சோழனே** அவ்வம்சத்தில் மிக வன்மையடைந்தவன். அவன் தன்னாட்டினை ஒரிஸா வரையிற் பரப்பிக் காஞ்சீபுரத்துப் பல்லவரை யழித்

துச் சின்னாள் பாண்டிய ராச்சியத்தையுஞ் சேர்த்துக்கொண்டான். இன்னும் இவன் மேலைச் சாளுக்கிய நாட்டையும் அழித்தன னென்பதூஉ தோன்று கின்றது. சோழர் வெகுநாட் சண்டை செய்துங் கடைசியில் இலங்கையை யிழந்தனர். ஆனாற் பின்னர் வந்த சோழன் காலத்திற் பழிவாங்குதற் காகச் சிங்களர் படையெடுத்து வந்து எளிதிற் றோற்றனர். பாண்டியர் தோற்றபின் இராஜேந்திர சோழன் மகனாகிய **கங்கை கொண்டான் சுந்தர பாண்டிய** னென்ற பெயருடன் ஆண்டான். குலோத்துங்கன் காலம் முதற் சோழர் வன்மை குறைந்து கொண்டேவந்து கடைசியில் 1310-ஆம் வருஷ த்தில் மகம்மதிய படையெடுப்பின்பின் அவ்விராச்சியம் மறைந்துவிட்டது.

**சேரகோங்கர்** :—அசோகனது கல்வெட்டெழுத்துக்களின்படி, சேரர் பாண்டியசோழரது காலத்தவர் என்பது போதரும். ஆயினும் அவரைப் பற்றி யொன்றுந் தெரியவில்லை. சின்னாண்முன்னர்க்கூட அவர் கொங்கு ராச்சியத்துச் சாதியாரேயோ அன்றி வேறு சாதியாரோ என்றதோ ரையப் பாடிருந்தது. ஆதலாற் கொங்குராச்சியத்தைப் பற்றியும் சேர அல்லது கேரள ராச்சியத்தைப் பற்றியும் தனித்தனியே கூறல் இன்றியமையாத தாகின்றது. கொங்குநாட்டில் முதன்முதல் ஆண்டதாகத் தெரிகின்ற வம் சத்தில் ரெட்டி சாதியைச்சேர்ந்த அரசர் எழுவர் இருந்தனர். அவராளு கையிற் கர்னாடகம் சயித்துச் சேர்த்துக்கொள்ளப்பட்டது. நாடுபரவிற்று. சேரசோழ பாண்டியர்மேற் பெற்றவெற்றியினாற் கீர்த்தியுமுடன்பரவிற்று. அவர்களுள் முதலறுவர் சைனர். ஆனால் எழாவிதரசன் சைவசமயத்தை மேற்கொண்டனன். இவ்வரசன் ஒரு மைசூர்த்தலைவனொடு போர்புரிகை யில் இறந்தனன் போலும். பின்னர் அத்தலைவன் சிம்மாசனத்தில் ஏறி னான். கங்கவம்சத்தை நிலைநிறுத்தியவன் இவனே. இவ்வம்சம் கி. பி. 189 முதல் ஏறக்குறைய கி. பி. 878 வரை ஆண்டது. இவராளுகையில் நாடு இன்னும் பரவிற்று. இவர் அதிகாரம் **ஹரிஹரபுரம்** வரையிற் சென்றது. கடைசியிற் சோழர் இந்நாட்டினைப் பிடித்துச் சேர்த்துக்கொண்டனர். அவர் அதனைப் பதினோராம் நூற்றாண்டின் மத்திவரையில் வைத்துக்கொண் டிருந்தனர். அப்பொழுது அது கலகஞ்செய்து பல சிற்றரசுகளாய்ப்பிரிந் தது. இவற்றை ஆயசாலவல்லாளர் சுமார் 1080-ஆம் வருஷத்திற் பிடித் துக் கொண்டு 250 வருஷம் ஆண்டனர். சேரரைப்பற்றிச் சிறிதேயறி வோம். பூர்வகாலத்தில் அவர் வடதிருவாங்கூரிலும் கொச்சியிலும் மலை யாளத்திலும் கன்னடத்திற்சில பாகங்களிலும் இருந்தனரென்பது தோன்று கின்றது. ஆனாற் கிறிஸ்துபிறந்து சில நாட்களிற் கன்னடத்தைத் தனியாக வேறொரு வம்சத்தார் 12-ஆம் நூற்றாண்டு வரையில் ஆண்டனர். சேரராச் சியம் 24 பிரிவுகளாயிற்றென்பதும் அவற்றைப் பிராமணர் ஆண்டனரென்ப தும் கர்ண பரம்பரையாகத் தெரிகின்றன. இப்பிரிவு முறை திருத்திகரமா

யில்லை. தலைவர் நால்வர் சேர்ந்து ஆண்டுபார்த்துப் பயனின்றிக் கைவிடவே, க்ஷத்திரியனொருவன் அரசனாயினன். இவ்வரசருட் கடைசியிலிருந்த **சேரமான் பெருமாள்** என்பவன் மகம்மதிய சமயத்தவனாய் 825-ஆம் வருஷத்தில் மெக்காவுக்கு யாத்திரை சென்றனன். அங்கிருந்து அவன் திரும்பிவரவேயில்லை. (இவரே சுந்தரமூர்த்தி நாயனார்க்குப் பேராதரவாயிருந்தவரும் சேக்கிழார்சுவாமிகளாற் பெரியபுராணத்திற் சிறப்பித்துக் கூறப்படும் சேரமான் பெருமாள் நாயனாரும் ஆகிய அப்பேரறிவாளர் தாமோ என்று ஐயுறற்கிடமுமுண்டென்பர் சிலர்.) அவன் போமுன்னர்த் தன்னாட்டைப் பிரதான பிரபுக்களுக்குப் பிரித்துக் கொடுத்துவிட்டுச் சென்றனன். இதனாற்றான் திருவாங்கூர் கொச்சி நாடுகளுண்டாயின. இதனாலேயே கள்ளிக்கோட்டை மகாராஜாவைச் சேர்ந்த நாடுகள் சுவாதீனமடைந்தன. சேரநாட்டுக்கரையிற் கி.மு. ஆறாம் நூற்றாண்டில் யூதர்கள் குடியேறினதாகக் கூறப்பட்டுளது. அவரைச்சேர்ந்த நாடுகள் இன்னும் ஆண்டுள.

**பல்லவர்** :—பல்லவரது சிற்பவேலைகளில் இன்னுஞ்சில காண்கின்றோமாதலின் அவர் சரித்திரம் மற்றையோரதனினும் இனியதாயிருக்கும். அவர்தாம் பொதுவில் இந்திய ஆயர்குலங்கட்கு முதல்வனாகிய **தாது** என்பவனது பின்னோர்களென்று சொல்லிக்கொண்டனர். அவர் முற்கூறியாங்குக் குறும்ப சாதியார். அவர் முதன்முதலில் திராவிடத்தில் தங்கியபோது ஒருவரும் ஆளவில்லையென்பதும் அதனாற் கலகங்கள் உண்டாகவே ஓரரசனை வைத்துக்கொண்டனரென்பதுங் கூறப்பட்டுள. இவ்வரசன் பெயர் **கோமாண்டக் குறும்பப்பிரபு** என்பது. இவனே பல்லவ வம்சத்திற்கு முதல்வன். இவன் காலத்தில் நாடு 24 பிரிவுகளாக்கப்பட்டது ஒவ்வொரு பிரிவிலும் கோட்டையொன்றுண்டு. அவற்றுட் சிறந்தது சென்னை யருகிலுள்ள புரளூர்க்கோட்டையாம். மற்றைக்கோட்டைகளிற் சில மகேந்திரவதி, ஆம்பூர்ப்பேட்டை, நாராயணவனம், வள்ளிமலை, படைவீடு ஆகிய இடங்களிற் காணப்படுகின்றன. படைவீட்டிலுள்ள அழிவுகளினால் அவ்வூர்ச்சுற்றளவு 16 மைல் வரையிலு மிருந்ததென்பது தெரிகிறது. இவரும் அயற்றேயத்தரசரும் செய்த செப்புத்தகட்டுச் சாசனங்களால் இவரது மெய்ச்சரிதம் வெளிப்படும். அவற்றின்படி. ஆறாம்நூற்றாண்டின் கடையில் இவர் வன்மையினது உன்னதபதவியில் இவர் நாட்டின் வட எல்லைகள் ஒரிஸ்ஸாவும் நர்மதாநதியும்; கீழ்த்தென் னெல்லைகள் முறையே கடலுந் தென்பெண்ணை யாறும் ; மேலெல்லை சேலம் பங்களூர் வழியாய்ப் பேராறுவரையிலு மிழுத்ததோர் கோடுமேயாம், தலைநகர் **காஞ்சீபுரம்.** அப்பொழுது அது வெகு நாகரிக மடைந்திருந்தது. தென்னிந்தியாவில் மதசம்பந்தமாய்ச் சிறந்த நகர் அஃதே. ஒரு காலத்திற் சைன மதமே அரச சமயமாயிருந்தது. ஆனால் நான்காம் நூற்றாண்டிற் பௌத்தமதத்தவ

ரும் பிராமணரும் அங்கிருந்த தாகக் கூறப்படுதலினாற் பரந்த கொள்கைகள் அவரிடமிருந்தன வென்பது தோன்றுகின்றது. கடல் வாணிகம் நன்கு நடந்தது. சனங்கள் கடலூர் முதற் கஞ்சம் வரையிலுள்ளபல துறை முகங்கள் வழியாக உரோமரோடும் மற்றைய மேலைச் சாதியாரோடும் வியாபாரஞ் செய்தனர். **மகாபலிபுர** மென்னும் எழுகோயிற் பட்டணத்தில் தனிக்கற்றூண் மண்டபங்களும் கோயில்களும் பல்லவர் செய்தன வென்று பல்லோருங் கூறுகின்றனர். தென் கோயில்களிலும் கணேசர் விக்கிரகத்திலுமுள்ள எழுத்துக்களில் அவ்வம்சத்தரச னொருவன் பெயர் உளது. ஏழாம் நூற்றாண்டிற் கீழைச் சாளுக்கிய அரசரில் முதல்வனான **குப்ஜ விஷ்ணு வர்த்தன**னென்பவன் வெங்கி, கலிங்கம், ஆந்திரம் ஆகிய வடபாகங்களைச் சேர்த்துக் கொண்டனன். மேலைச்சாளுக்கியரைச் சேர்ந்த **பௌலகேசியிரண்டாவன்** தெற்கிற்பல நல் வென்றிகள் பெற்றனன். அது முதற் பல்லவராச்சியம் அழிந்துகொண்டே வந்தது. பதினோராம் நூற்றாண்டில் இராஜேந்திர குலோத்துங்கசோழன் முதலாவன் மகனாகிய **ஆதொண்டைச் சக்கிரவர்த்தி** அவரைப் புரளுநிர்சயித்தான். இதுதான் பல்லவர் அடைந்த கடைத்தோல்வி. திராவிடம் சோழ ராச்சியத்திற் சேர்ந்தது. அது முதல் அதற்குத் **தொண்டைமண்டலம்** என்று பெயர்.

**சாளுக்கியர்** :—சாளுக்கியர் ஓர் இராஜ புத்திர சாதியார். அவர் முதன் முதலில் ஆறாம் நூற்றாண்டின் றொடக்கத்தில் தலைக்கிளம்பினர். அவ்வம்சத்தை நிலை நிறுத்தியவன் **ஜயசிம்மன் முதலாவன்**. அவன் சூரிய குலத்திற் பிறந்ததாகச் சொல்லிக்கொண்டனன். முதற்றலைநகர் நிஜாம் ராஜ்யத்துக் **கல்யாணபுரி**. அங்கிருந்து சாளுக்கியர் கன்னாட்டினைக் கிழக்கே கோதவரி கிருஷ்ண நதிகளுக்கு நடுவிலுள்ள கடற்கரை வரையும் வடக்கே தௌலதாபாக்கம் வரையும் வியாபித்தனர். மைசூரின் பெரும்பாகம் அவரைச் சேர்ந்ததே. ஜயசிம்மன் இறந்தபின் அவனுக்குப் பிறந்த **இராசசிம்மன்** பல ஜயங்கள் பெற்றனன். காஞ்சீபுரத்துப் பல்லவ ராஜனோடு நட்புப் பாராட்டித் தன்வன்மையினை யதிகரித்துக் கொண்டனன். ஏறக்குறைய 610-ஆம்வருஷத்தில் அரசவம்சத்தவர் நாட்டினைப் பிரித்துக்கொண்டனர். **சத்தியாசிரயன் முதலாவன்** மேலைத்தக்ஷணத்தில் இருந்தனன், குப்ஜவிஷ்ணுவர்த்தனன் பல்லவரிடமிருந்து பிடுங்கிக்கொண்ட நாட்டினிற் கீழைச்சாளுக்கிய ராச்சியத்தை நிலைநிறுத்தினான். சத்தியாசிரயன் மேலைச்சாளுக்கிய அரசருள் உயர்ந்தோரில் ஒருவன். ஆனால் அவன்பின் அவ்வம்சம் சிறிது அற்றது. கடைசியில் 670-இல் **முதல்விக்கிரமாதித்தியன்** பட்டத்துக்கு வந்தான். சின்னூற்றாண்டுகட்குப்பின்னர் வம்சம் மறுபடியும் அற்றது. அதன்பின் அவ்விராச்சியத்தைப் பற்றி ஏறக்குறைய 200-ஆண்டுகட்கு ஒன்றுந்தெரியாது. பிறகு அது முன்போல் வன்மையடைந்தது. 1126-வரையில் அவ்

வாறேயிருந்தது. பின் அது விரைவில் அழிந்து விட்டது; 1189-க்குப் பின் அதனைப்பற்றி யொன்றுமே யறியோம். கீழைச்சாளுக்கியர் பிரிந்த பின் சிறிதுசிறிதாய்த் தந்நாட்டினை ஒரிஸா வரையிற் பரப்பினர். தலைநகர் இராஜமஹேந்திரவரம். 1064-இல் இராஜ ராஜ சோழன் சாளுக்கிய இராசகுமாரியை மணந்து கொண்டதனால் அவன்மகன் இராஜேந்திரன் கீழ்க் கீழைச்சாளுக்கிய ராச்சியமும் சோழராச்சியமும் ஒன்றாயின. அப்பொழுது முற்கூறிய தேசம் சோழராச்சியத்தின் வடபாக மாயிற்று. அது கடைசியில் வாரங்கல்கஜபதிகளாற் பிடித்துக்கொள்ளப்பட்டது. சாளுக்கியர் முக்கியமாய்ச் சிற்பம் வல்லோர். அவரிருந்த நாட்டிற் சிற்ப சாஸ்திரத் தொழினலஞ் சான்ற சிலகட்டிடங்களுள. பல்லவர் தோல்வி பௌத்த ஜைன மதங்களைப் பிராமணர் வென்றவாற்றைக் காட்டுதலான் முக்கியமானது.

**சருக்கை-வரதாசாரியன்.**

---

## AN ADAPTATION OF ADDISON'S VISION OF MIRZA.

## மரீசிகண்ட பாவனைக்காட்சி.

(63-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

**அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.**

33. இந்தப் பொறிகள் பாலத்தி னிடையிற் குறைந்து மிறுவாயிற்
பந்தி யாக முழுக்கண்கள் பரித்த விடத்துப் பலவாயுஞ்
சிந்திக் கிடந்த திடிந்தனி சிந்தைக் கண்கள் மீதுஞ்சிலர்
குந்திக் குந்தி நடந்தனராற் கொடிய வமண்புல் லரைநிகர்ப்ப.

34. எனினு மவர்க ளிதுகாறு மிடர்கள் பொதுளு மிவ்வழியிற்
றனியுற் றேங்கி நடந்ததனாற் சோர்ந்து வீழ்ந்தார் நிரைநிரையா
யினைய விந்தை சேர்பாலத் தெண்ணில் பலவாம் பொருள்கண்ணுற்
றெனது சிந்தை யினைத்துரப்ப வெண்ணிச் சிறிது போழ்தமர்ந்தேன்.

35. கவலை சிறிது மனத்திலராய்க் களித்துச் சிரித்து விளையாடு
நவையில் பலரந் நிலைதனிலா நழுவி விழுந்து விளிதலையுந்
தவறி யாங்கு வீழ்பொழுதிற் றப்பு மாறு கைக்கெட்டு
மெவையும் பிடிக்க முயறலையு மெண்ணி யெண்ணி யேங்கினெனால்.

36. உண்மை யாயப் பரம்பொருளை யுயர்வா னோக்கித் தியானிக்குந்
திண்மை கூர்ந்த சிந்தையர்போற் சிலராண் டிருந்த வன்னணமே
விண்மீ திருந்து விழுந்தொளிக்கு மீன்போற் றவறி வாரிவயின்
வண்மை தீர்ந்தோர் வளப்பமென மறைந்தெ ழுந்து போயினரால்.

37. மற்றும் பலர்தங் கட்கெதிரின் மன்னு சோதி யுடனெழுந்து
சுற்றி யசைந்தா டுறும்பலவாத் தோன்றுங் குமிழி தமைத்தொடர்ந்து
பற்று மாறு தமதுகரம் பண்பி னீட்டும் பருவத்து
ளெற்று திரையிற் கானமுவி யிமைக்கு முன்னர் மூழ்கினரால்.

38. இன்ன குழப்பத் திடைச்சில்லோ ரிமிர்வாள் பற்றி யிங்குமங்கு
நன்ன ரோடி நாற்புறமு நாடிப் பொறியி லாவழிக்கண்
மன்னு வோரை வழிமறித்து வாளாற் றடிந்து பொறியுள்விழ
வின்ன லியற்றிப் பாலமிசை யேகு மவரைக் கண்டனனால்.

39. பொறியி லிங்ஙன் வீழ்த்தாமற் போவ ரேலம் மாந்தருடர்
நெறியிற் சென்று நேருமிடர் நீங்கி யுய்த னிச்சயமா
மறிவு சிறிது மிலாதவெனை யன்பிற் றடுத்தாண் டருளவிவண்
செறியு மினைய விர்தைபல தெரித்த சித்த னெனைநோக்கி.

40. அன்ப வின்னு முனதரிய வறிவுக் கெட்டாப் பொருளுளவே
வின்பி னோடென் பாலுரைத்தி யென்றான் யானு மேறெடுத்து
முன்பு பார்த்தேன் மாகநின்று மூரிக் கழுகு கூகைகொடி
வன்பி னோடும் பாலமிசை வந்து பலகா லிறங்கினவால்.

41. இன்னும் வலிய விருஞ்சிறைக ளிருபா லுடைய பாலர்பல
ரன்னப் பறவைக் குழுவிடையாண் டமர்த லாக விறும்பூது
துன்னு முளத்தோ டின்னவையா தூய நேயத் தொடர்புள்ளா
யென்ன விசைத்தே னிருந்தவனு மென்பா லன்பு செறிந்திடவே.

42. நண்ணு மறிவி னலனுடையாய் நாடு மினிய நானிலத்தோ
ரெண்ணு ளாடும் பொருளாசை யேக்கங் காமம் வீண்பத்தி
புண்ணை யொக்கும் பொறாமைகதம் பொருந்து நன்றி கோறன்முத
லெண்ணி லாத கவலைபல விவையென் றறிதி யெனவுரைத்தான்.

43. ஐய னுரைத்த மொழிகேட்டே னறிவு கலங்கி வெய்துயிர்த்தே
னைய கோமா றுடவாழ்க்கை யநித்த மேயெம் மாறுடனும்
வைய மிசைச்சஞ் சலத்தாழ்ந்து வாணாண் முழுதும் வேதனைப்பட்
டுய்யு நெறியின் றுயிர்நீத்த லோகோ கொடிதென் றுரைத்தேனால்.

44. இந்த வுரைகேட் டிருந்தவத்தோ னென்மீ திரங்கி யெனைநோக்கி
யந்த ணாள வினிமனித னரிய சித்த மடைதரச்செய்
விந்தை சேர்யாத் திரைமுதற்கண் விரித்த கூறும் பிரபஞ்சர்
தந்த வாழ்வு தனைக்காண றவிர்வாய் சிறிதும் வருந்தேனீ.

45. ஊழி யூழி தோறுமிவ னுயர்பா லத்தின் பொறிவழியா
வீழு மனிதர் தமையிழந்து விரைந்து நடக்கும் வெள்ளமிருள்

வாழு முகில்வாய் மறைதலைநீ மகிழ்ந்து காண்டி யென்றுரைத்தா
னேழை யேனு மாணைவழி யெய்ந்து நோக்கி னேனப்பால்.

46. சித்த னென்கண் ணிணைவிளக்கிச் சிறக்கும் பார்வை யருளினனோ
தத்து மலைகள் செறியுததி சாரு முகிலை விலக்கினனோ
நத்தி முனம்பா னாடியபுன் னாறு புலத்தின் புறத்தொருபே
ரத்தி யிலக வொருவயிர வடுக்க லதனை யூடறுத்து.

47. இரண்டு பாலுஞ் சமனாக விடையிற் பிரித்த தாலின்னு
மிருண்ட முகிலோர் பாதிதனி விறுத்த லானப் பாலறியேன்
திரண்ட மற்றோர் பாதியிடைச் சிறிய தீவம் பலசெறிந்த
சுருண்ட வலைக ணாற்புறமுஞ் சுடர்வி டுத்துச் சூழ்ந்தனவால்.

48. அன்ன திடர்க ளிடையேபல் லாரா மங்கண் மலர்பொதுளி
மின்னி நறிய மணம்பரப்பி மிளிர்ந்து நறையூ றியகனிக
ணன்னர் நிறைந்து நீரருவி நாப்ப ணிலங்க வயங்கினவெள்
ளன்ன முதலாம் பலபறவை யவற்றி னிடைவாழ்ந் திருந்தனவால்.

49. மன்ற னாறு பொழிலினிடை வயங்கு குயிலி னிசையமுதந்
தென்ற லாலம் மரங்களிடைச் சிறக்கு மொலியுந் தேனருவி
குன்றி னின்று வீழொலியுங் குமரர் புனலாட் டொலியுமெழி
றுன்று மகளி ரிசையுஞ்செவித் துணைவாய்க்கேட்டு மகிழ்ந்தனனால்.

50. ஆண்டுப் பலர்பொன் னாடையுடுத் தணிந்து நறிய தாரகலம்
பூண்டு கலவை பூசிமலர் புனைந்து மரங்க ளிடையுலவி
நீண்ட வருவிக் கரையினிடை நின்று மிருந்தும் பாழ்ங்குழலில்
வேண்டு மிசைகள் பயின்றுமலர் விளங்கு மஞ்ச மிசைத்துயின்றும்.

51. இருந்த னோக்கி யெனதிதய மின்ப வாரி யிடைமூழ்கி
யருத்தி யோடாங் கிருசிறைக ளடைந்தா லனைய மனங்கவருந்
தாத்த பொழில்க ளிடையேக றகுதி யாமே யெனநினைத்தேன்
சிரித்தச் சித்த னெனைநோக்கிச் செய்ய பவள வாய்திறந்து.

52. ஐய னேயென் பாலமைந்த வன்பி னோய்ம ரீசியெனும்
மெய்ய னேயிப் பாலமிசை விரவிக் கிடக்கும் பொறியாகும்
வெய்ய மரண வாயிலின்றி விளங்கு மனைய திடர்சேரச்
செய்ய வழிவே றில்லையென்று செப்பிப் பின்னுஞ் செப்புவனால்.

53. உன்ற னிணைக்கட் புலனுணரு மோங்கு முத்தி யளவுமெதிர்
துன்று பசிய புள்ளிகள்போற் றோன்று திடர்கள் வேலைவயி
னின்ற மணலின் றொகைதனினு நிரம்ப வதிக மாநினைவா
யன்றி யுன்கண் ணறிவறியா வநந்தந் திடரப் பாலுளவால்.

54. இன்ன யாவுஞ் சான்றோர்க ளிருந்த பின்ன ரடைதருசீர்
மன்னு மாட மாளிகையா மற்று மவர்செய்ந் நல்வினையின்
பன்னு தரத்திற் கிணையாகப் பலவாய் வெவ்வே றுகவமைந்
தன்ன திடர்க ளவரவர்கட் கமைந்த வின்ப மளித்திடுமால்.
55. தன்னி லுறைவோர் தகைமைக்குந் தக்க வன்னோர் விருப்பினுக்கு
நன்ன ரியைந்து வேண்டுவன நாடு முன்ன ரளித்தவர்க்குப்
பன்னு மின்பம் பயந்திணைய பண்பு வாய்ந்த தீவமெலா
முன்னு முயர்வீ டெனவொளிர்த லுண்மை காண்டி யுத்தமனே.
56. ஈதின் னணமீண் டியலுறுமே லெழின்ம ரீசிப் பெயருடையாய்
வாதை பலயா மடையினுமிம் மாண்பு சேரு மிடம்பெறற்குக்
காதல் கொண்டு நலம்புரிவான் கடைப்பி டித்திம் பரின்மேவ
னீதி யன்றோ பலகாலு நினைந்து நன்னர்த் தெளிந்திடுதி.
57. இனைய மறுமைப் பயன்பெறுதற் கிடன்சேர் மனித வாழ்க்கைமிக
வினையுந் துன்பம் பயப்பதென விகழ்தற் பால தோவியம்யா
யினிய சுகத்தை நணியுதவு மீடி னில்லை யடைதரச்செய்
யனைய மரண மருவருப்போ டஞ்சற் பால தோவறைதி.
58. இனைய தாய நித்தியமா மிணையி லாத பேரின்ப
மனித னடைதல் சாலுமெனின் மற்றிவ் வாழ்வு பயனிலதோ
வினிதி னுய்தி யென்றுரைத்தா ரென்னை யிங்ஙன் றெருட்டியவப்
புனித னுண்மைப் பொருள்விளக்கப் புகுந்த பொருவி லாவறிஞன்.
59. பகரன் முடியா வானந்தம் பரித்த மனத்தி னேனனைய
நிகரி லின்பஞ் செறிதிடரை நின்று நோக்கி னேன்பின்னர்ப்
புகரி லோயப் பெருங்கடலிற் பொருந்து மெழில்சே ரொளிவைரச்
சிகரிக் கப்பா லுளமுகிலிற் செறிவ யாவை தெரித்தியென்றேன்.
60. அறிஞ னென்றும் பகர்ந்திலனு லவனைப் பின்னு முசாவகினைந்
தெறியு மல்லா யிலங்குதிட ரெழிலைக் காண றவிர்ந்தருகி
லுறைமா தவன்றன் முகநோக்க வுவனை யாண்டுக் கண்டிலென்பின்
செறியு மின்பத் திடர்காணத் திரும வவையு மறைந்தனவால்.
61. பொங்கி யலைக ளுற்புறமும் புரண்டு வீசுங் கலுழியுமீத்
தங்கி யொளிரும் பாலமும்வான் றடவும் வயிரக் குன்றமுமோர்
பங்கி லின்பம் பயந்ததிடர் பலவு மறைந்து நீங்கவவ
ணெங்கும் யான்முன் கண்டபுலத தெருது மாடு மியங்கினவால்.
62. என்று தான்மு னிணைவிழியா விமையா தெதிர்காண் காட்சியினைத்
துன்று தவத்தோன் மரீசியெனுஞ் சுருதி நாவான் சொற்றபின
ரன்று பாங்க ரமர்ந்தவன்ற னமுத மொழிகேட் டகங்களித்தோர்
நன்று நன்றென் றவற்றெழுது நாடித் தத்த மிடம்பெயர்ந்தார்.

ந. பலராம ஐயர்.

# RADHARANI: A NOVEL.

## இராதாராணி.

### இரண்டாம் அத்தியாயம்.

இராதாராணி தாயார் பத்தியம மாத்திரம் வாங்கிக் கொண்டாள். ஆனால் ரோகத்தினின்று விடுபட அவள் கொடுத்துவைக்கவில்லை. அவள் மிகவும் பணக்காரியாயிருந்தாள். தற்காலம் மாத்திரம் ஏழையாய் விட்டதில் இவ்வித மனோதுக்கங்களையும் சரீர கஷ்டங்களையும் சகிக்க முடியாமற் போய் விட்டாள். நோய் விருத்தியாகி அவளுக்கு முடிவு காலம் நெருங்கிற்று.

இந்தச் சமயத்திற் சீமையிலிருந்து 'பிரிவி கௌன்சி'லில் அவள் பக்கம் தீர்ப்பானதாய்ச் செய்திவந்தது. ஆஸ்தியை யெல்லாம் அவளுக்குக் கொடுப்பதன்றிச் செலவான ரூபாய்களையும ஜாமீன் ரூபாய்களையுங்கூடக் கொடுக்க வேண்டுமென்று 'டிக்கிரி' சிஷ்கரிஷையாயிற்று. காமாக்கியநாதன் 'ஹைகோர்ட்'டில் இவள் பக்கம் 'வக்கீ'லாயிருந்தவன் தானே அவள் குடிசைக்கு வந்து அவளுக்கு இந்தச் செய்தியைச் சொன்னான். அந்த வார்த்தையைக் கேட்டு நோயாளியின் கண்களினின்று அதிகமாய் நீர்த்தாரை பெருக வாரம்பித்தது.

அவள் சிறிது நேரத்திற்கெல்லாம் கண்களைத் துடைத்துக் கொண்டு காமாக்கிய நாதனைப்பார்த்து: "அணைந்துபோன தீபத்துக்கு எண்ணெய் வார்த்துப் பிரயோஜனமென்ன? நீ சொல்லிய இச்செய்தியினால் என் பிராணன் நிற்கப்போகிறதில்லை. என் ஆயுள் முடியுங்காலம் வந்திருக்கிறது. ஆனால் இனி உணவில்லாமற் பிராணஹுதியாகம் பண்ணவேண்டிய அவசரமில்லை என்னும் நிச்சயத்தினாற் சுகமடைந்தேன். ஆயினும் அதைக்கூட யார் அறிவார்? இராதை இன்னும் இளம்பெண். இந்தச் சகல சம்பத்தையும் அவள் நிமித்தமாய் யார் காப்பாற்றிக் கொடுப்பார்? நீயே ஆதாரம். உன்னை நம்பினேன். இந்த என் முடிவு காலத்தில் உன்னை ஒரு பிச்சை கேட்கிறேன். தயைசெய்துகொடு. உன்னை யன்றி வேறு யாரை வேண்டிக் கொள்வேன்?" என்று சொன்னாள்.

காமாக்கியன் மிகவும் பெரிய மனுஷ்யன் அன்றியும் இராதாராணியின் பிதாவுக்குச்சுற்றத்தான். இராதாராணியின் தாய்கஷ்டஸ்திதிக்கு வந்ததுமுதல் அவளைப் 'பிரிவிகவுன்சி'லில் 'அபீல்'முடிவாகும் வரையில் தன் வீட்டில் வந்திருக்கும் பக்ஷத்தில் தன் தாயாரைப்போல் வைத்துக்கொண்டிருப்பதாக மிகவும் பிரார்த்தித்தான். இராதாராணியின் அன்னை அதற்குச் சம்மதிக்கவில்லை. காமாக்கியன் மாதத்துக்கேதாவது செலவுக்குகொடுக்கிறேன் அதை வாங்கிக்கொள் என்று சொன்னான் அதற்கவள் என்னிடம் கொஞ்சம் மீந்திருக்கின்றது, வேண்டும்போது வாங்கிக்கொள்ளுகிறேனென்று சாக்குச்சொன்னாள். அவன் சகாயத்தை அடைவதற்குச் சம்மதிககவில்லை. ருக்மிணீகுமாரன் செய்த தானத்தைப் பெற்றதுதான் முதன்மை. கடைசியாய்ப் பெற்ற தானமும் அதுவே. இராதாராணியின் தாயார் இவ்வளவு கஷ்ட

தசையிலிருப்பது காமாக்ஷியனுக்குத் தெரியாது. இவர்கள் நிலைமையைக் கண்டு காமாக்ஷியன் மிகவும் துக்கித்தான். இராதாராணியின் தாய் தன் அந்தியகாலத்தில் வேண்டிக்கொண்டதைக்கேட்டு அவனுக்கு இன்னும் துக்கம் அதிகரித்தது. அதன்மீது அவன் இராதாராணியின் தாயாரைப்பார்த்து, "தாங்கள் உத்தரவு கொடுங்கள் நான் என்னசெய்யவேண்டும்? தங்கள் இஷ்டப்படி நிறைவேற்றுகின்றேன்" என்றான்.

இராதாராணியின் தாய், "நான்போகிறேன். இராதாராணி இருக்கிறாள். 'கோர்ட்'டில் எங்கள்மாமாவின் 'உயில்' ஆயத்தமாயிற்று, அவ்வாஸ்திக்கெல்லாம் இராதாராணி ஒருத்தியே அதிகாரியாவாள்; நீ அவளை உன்மகளைப்போற் பார்த்துக்கொள்ளவேண்டும். இதுதான் நான் பிரார்த்திக்கிறது. நீ இதற்குச் சம்மதித்து ஒப்புக்கொள்ளும்பக்ஷத்திற் சுகமாய் பிராணனை விடுவேன்" என்றாள். காமாக்ஷியன "நான் பிரமாணமாய் இராதாராணியை என் மகளைவிட அதிகமாய்ப் பார்த்துக்கொள்ளுகிறேன். நான் இவ்வார்த்தையைத் திரிகரண சுத்தியாய்க் கூறுகின்றேன். தாங்கள் இதனை நம்பவேண்டும்" என்றான்.

ஆயுள் முடிவை நெருங்கப்பெற்ற இராதாராணி தாயார் காமாக்ஷியன் கண்களில் நீர்ததும்பிப் பெருகுவதைப்பார்த்து அவன் பேச்சில் நம்பிக்கை கொண்டாள். அவளது மடிந்த உதட்டிற் களிப்பைக்குறிக்கும் சிரிப்புக் காணப்பட்டது. காமாக்ஷியன் அச்சிரிப்பைப் பார்த்து 'இனி இவள் பிழையாள்' என்றறிந்து கொண்டான்.

காமாக்ஷியன் அவளைப் பார்த்து, 'இப்பொழுதாவது தாங்கள் என் வீட்டுக்கு வந்து சிலநாளிருந்து தங்கள் வீடு 'கோர்ட்டு' மூலமாய் சுவாதீனமான பின்னர் அங்கே போகலாம்' என்று சாலவும் வேண்டிக்கொண்டான். இராதாராணி தாயாரின் அகங்காரம் வறுமையினால் உண்டானமையால் வறுமை நிலைமையில் அவனகத்துக்குப் போகச் சம்மதிக்கவில்லை. இப்பொழுது அவ்வறுமை போய் விட்டது; அவ்வகங்காரமும் போய் அவன் வீட்டிலிருக்க ஒப்புக்கொண்டாள். காமாக்ஷியன் இராதாராணியையும் அவள் தாயையும் தன் இல்லத்துக் கழைத்துக்கொண்டு சென்றான்.

அவன் அவளைத் தாயெனக்கருதிச் சிகிச்சை செய்தான். ரோகம் நிவர்த்தியாகவில்லை. சில நாட்களில் அவள் தெய்வகதி யடைந்தாள். காலக்கிரமத்திற்காமாக்ஷியன் இராதாராணியின் ஆஸ்தியை யெல்லாம் சுவாதீனம் செய்து கொடுத்தான். ஆனால் இராதாராணி இன்னும் சிறு பெண்ணாயிருந்தமையாற் காமாக்ஷியன் அவளைச் சொந்த வீட்டுக்குத் தனிமையாய் அனுப்பிப்பதற்கு மனது வராமல் தன் வீட்டிலேயே வைத்துக்கொண்டிருந்தான். 'கலெக்டர்' துரையே அவள் ஆஸ்தியைக் 'கோர்ட் ஆவ் உவார்ட்ஸ்' சுவாதீனம் செய்துகொள்வதற்கு முயன்றார். காமாக்ஷியன் தான் இராதாராணியினிமித்தம் அவள் ஆஸ்தியைக் காப்பாற்றுவது போல் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் காப்பாற்றார்கள் என யோசித்து, அவ்விஷயத்தைப் பற்றி வாதித்ததன்மேற் 'கலெக்டர்' சும்மாவிருந்தார். காமாக்ஷியன் தானே இராதாராணி ஆஸ்தியின் விசாரணை செய்துகொண்டிருந்தான். இனி ஆக வேண்டியது இராதாராணி விவாகம்: ஆனாற் காமாக்ஷியன் நவீன சீர்திருத்தக் காரனானமையாற் பாலிய விவாகம் செய்வதற்கு அவன் இஷ்டப்படவில்லை. சீக்கிரமாய்க் கல்லியாணம் செய்யாத பட்சத்தில் ஜாதிப்பிரஷ்டம்

செய்து விடுவார்களென்னும் பயமுமில்லை; தன் மகளுமல்லள். 'இராதாராணி இஷ்டம் வந்த பொழுது தானே கல்யாணம் பண்ணிக்கொள்ளட்டும்; அது வரையில் வாசித்துக் கொண்டிருக்கட்டும்' என்று அந்த விவாக விஷயத்தில் யாதொரு பிரயத்தனமும் செய்யாமல் அவளுக்குச் சரியாய்ப்படிக்கவும் எழுதவும் கற்பித்து வந்தான்.

இரண்டாம் அத்தியாயம் முற்றிற்று.

தி. அ. ஸ்வாமிநாத ஐயர்.

---

# CURTAIN LECTURES.

## பள்ளியறைப் பிரசங்கம்.

### Second Night-இரண்டாமிரவு.

**இராமசுப்பஐயர் தம் நண்பர் கிருஷ்ணசாஸ்திரியாருடன் நாடகம் பார்க்கப்போய் இரவில் ஒரு மணிக்குமேல் வீட்டுக்கு வந்தார்.**

"இப்படி யார்தான் கஷ்டப்படுவார்களோ தெரியவில்லை! இவ்வளவு துன்பப்படவேண்டுமென்று தெரிந்திருந்தால் உமக்கு ஒருத்தியும் வாழ்க்கைப் பட்டிருக்க மாட்டாள். பெண்ணாய்ப் பிறந்தால் வெளியே போகாமல் அடுப்பங்கரையில் உட்கார்ந்து உழைக்கவேண்டும். புருஷர்கள் மாத்திரம் தங்கள் மனம் போனபடியெல்லாம் தெருத்தெருவாய்த் திரியவும், கூத்துப் பார்க்கவும், சீட்டாடவும் போகலாம். இது என்ன நியாயமோ? தெரியவில்லை. நீர் சீட்டாடுவதில்லையா? அது எனக்கெப்படித் தெரியும்? நீர் ஆடினாலென்னவோ, அது நான் வாழ்ந்தது போல்தான் இருக்கும்.

"சரி! இன்னும் நித்தியமும் இந்த இழவுதான். ஏதோ போனால் போகட்டும் என்று இன்றைக்கு விழித்துக் கொண்டிருந்தேன். நாளைமுதல் விழித்துக்கொண்டிருப்பேன் என்று நினைக்கிறீரோ? அந்த யோசனை உமக்கு வேண்டியதே யில்லை. வேலைக்காரி உமக்காக எழுந்திருப்பாளோ? பார்ப்போம்! நாளைமுதல் அவளை இங்குப் படுத்துக்கொள்ள வேண்டாமென்று சொல்லி விடுகிறேன். கதவை வெளிப்புறம் பூட்டிக்கொண்டு போகிறீரா? சரிதான், நாங்கள் பிழைத்திருப்பது உமக்கிஷ்டமில்லை! எனக்கென்ன! நீர் என்ன வேண்டுமென்றாலும் செய்யும். நான் என்னவோ கதவைத் திறப்பதில்லை. என் பிராணன் போனாலும் சரி. ஊரெல்லாம் திருடர் பயம் அதிகமாயிருக்கிறது. நீர் இப்படித் தினமும் நாடகம் பார்க்கப்போம். எங்களை யாராவது வந்து அடித்துவிட்டு வீட்டிலிருப்பதை யெல்லாம் எடுத்துக்கொண்டு போகட்டும். அப்படியானால் தான் உமக்குப் புத்தி வரும். எனக்கென்ன தலையெழுத்தா அடிபடவேண்டுமென்று? இராத்திரி ஒன்பது மணிக்குள் நீர் வீட்டுக்கு வராவிட்டால் பிள்ளைகளை யழைத்துக்கொண்டு என் தாயார் வீட்டுக்குப் போய்விடுகின்றேன்.

"இனிமேற் சீக்கிரம் வந்துவிடுகிறீரா? உமக்கென்ன? அழுகிற பிள்ளைக்கு வாழைப்பழம் காட்டுவதுபோல் இப்பொழுது சொல்லிவிடுகிறீர். நாளை என்னசெய்யப் போகிறீரோ? எனக்கெப்படித்தெரியும்? உமக்குத்தான் தகுந்த சிநேகிதர்கள் அகப்பட்டிருக்கிறார்கள். அவர்களோடு சேர்ந்தால் உமக்கு மனையாள், மக்கள் என்னும் ஞாபகமே யற்றுப்போய் விடுகின்றதே! நாளைக்காலை,—என் நாளை?—இன்றைக் காலைதான் – இப்பொழுது தான் பொழுதுவிடியப் போகிறதே! காலையி லெழுந்ததும் தலைவலியென்று சொல்லுவீர். அப்புறம் காய்ச்சல்வரும், மருந்து வாங்கவேண்டும் என்பீர், வைத்தியனை அழைத்துவரவேண்டு மென்பீர், பத்தியத்திற்கு முருங்கைக்காய் வாங்கவேண்டு மென்பீர். நான் என்னவோ ஒன்றும் வாங்கப்போகிறதில்லை. ஏன்? தெருவிலிருப்பவ ரெல்லாரும் இராமசுப்ப ஐயர் கூத்துப்பார்க்கப் போயிருந்தார். தலைவலியும் காய்ச்சலும் வந்துவிட்டதென்று இகழ்வதற்கா?

"உமக்குக் காய்ச்சல்வராதா? வராவிட்டால் நல்லது தான். வந்தால் உமக்கு வேண்டியன வெல்லாம் நீரே வாங்கிவரவேண்டும். தலை நன்றாய் வலிக்கவேண்டும். அப்பொழுதுதான் எனக்குச் சந்தோஷமாயிருக்கும். இன்றைக்கு ஒருமணியாயிற்று, நாளை இரண்டுமணியாகும், அப்புறம் இரவெல்லாம் வீட்டிற்கு வரமாட்டீர். குடும்பம் சீக்கிரம் விடிந்தாற் போல் தான், என்ன சொன்னீர்? பைத்தியம் பிடித்தாற்போற் பேசுகிறேனா? உமக்குப் பைத்தியமோ? எனக்கோ? ஆம்! எனக்குத்தான் பைத்தியம். ஒருமணி வரையில் விழித்திருந்து கதவைத்திறந்தேனே! எனக்குப் பைத்தியம் பிடித்துத் தான் விழித்துக்கொண்டிருந்தேன்.

"இன்றைக்கு எவ்வளவு இரண்டு ரூபாய் செலவாயிற்றோ கூத்துப் பார்த்ததற்கு? நீர் ஒன்றும் கொடுக்கவில்லையா? ஏன்? உங்கள் சிற்றப்பன் மகனோ கூத்தாடியவன் யார்? கிருஷ்ண சாஸ்திரியார் கொடுத்தாரா? சரி தான்! நீங்கள் உருப்பட்டாற் போல்தான்! கிருஷ்ண சாஸ்திரிகள் சகவாசம் அகப்பட்டதா? இருக்கட்டும். தான் கெட்டது போதாமல் உம்மையுங் கெடுக்கத் தலைப்பட்டானா அந்தப்பாவி? இன்றைக்கு உமக்குக் கொடுத்துக் காட்டினானோ நீரும் இப்படியே கொடுக்கவேண்டு மென்று? பெட்டியையும் நகைகளையும் என் தாயிடம் கொடுத்துவிடுகின்றேன். ஏன்? கிருஷ்ண சாஸ்திரிகள் மனையாளுக்கானகதி எனக்கும் ஆவதற்கா? போய்ப்பாரும் வேண்டுமானால் அவளை. கழுத்தில், பாவம், மாங்கலியம் ஒன்றுதான் இருக்கிறது. அவள்தான், பாவம், வாயில்லாப்பூச்சி, நானும் அப்படியே யிருப்பேனென்று நினைக்கவேண்டாம். மக்கள்மீது உமக்கில்லாவிட்டாலும் எனக்குக் கொஞ்சம் அபிமானம் இருக்கிறது.

"அந்தப் பாதகன் கிருஷ்ண சாஸ்திரி இன்றைக்கு உமக்குக் கொடுத்தான். நாளை ஒன்றுக் கிரண்டாய் உம்மிடத்தில் வாங்கப்போகிறான். அவன் மாத்திரமா? அவனுடைய நண்பர் எல்லாருக்கும் நீர் கொடுக்கவேண்டி வரும். சம்பாதிப்ப தெல்லாம் இப்படிக் கூத்திற்குக் கொடுத்துவந்தால் வேறுவினை வேண்டியதில்லை. இருப்ப தெல்லாம் இப்படிப் போக்கடித்துக் கொண்டால் நம் மக்கள் எப்படித் தலையெடுப்பார்கள்? உம்முடைய பெயரைச் சொல்வதற்கும் அவமானமா யிருக்குமன்றோ? அவர்கள் பொருட்டாயினும் கூத்திற்குப் போவதை நிறுத்தமாட்டீரா?....."

இங்ஙனம் பிரசங்கித்துக்கொண்டிருக்குங்காற் கனகம்மாவுக்கு நித்திராதேவி பிரசன்னமாய்விட்டாள்.

"கிரு—ஷ்—ண" என்றாள் சாஸ்திரி யென்னுஞ் சொல் உள்ளேயே நின்று விட்டது.

ஜக்கராஜு ப. வாசுதேவைய பந்துலு.

---

## CORRESPONDENCE.

## கடிதம்.

### தமிழுலகர்க்காத் தந்த விண்ணப்பம்.

பிரமஸ்ரீ சூரிய நாராயண சாஸ்திரிகளாகிய பரிதிமாற்கலைஞரவர்கட்குத் தமிழுலகோர் பொருட்டுத் தந்த விண்ணப்பம் :

சென்ற ஞானபோதினிச்சஞ்சிகைகளுளொன்றில் தாங்கள் அறு என்ற தாதுவைக் கொண்டாய்ந்த பகுபத முடிவுகளைக் கண்டு ஆநந்தங் கொள்ளார் சிலரேயாவர். அறம், குதிரை, நிலம் முதலியன பகாப்பதங்களாமெனச் சிவஞான முனிவரரே கூறினுமென்னே ? நங்கோவையைப் பெரிய சந்திரசேகரம்பிள்ளை யவர்களிடம் அவர்கள் முடித்து வைத்திருக்கும் காரணப் பதமுடிவுகளை நோக்கிக் காலஞ்சென்ற மகா வித்துவான் தாமோதரம்பிள்ளை யவர்கள சித்தாந்தத்தினையே தங்கருத்துங் காலமுமெலா மூன்றிச்செலுத்திய அம்மாபாடிய முடையார்கூற்று இவ்விடயத்திற் கூற்றேயா மென்றனர். மகா நாவலர்களுளரேனும் அவர் தஞ்செய்கைகண்டு மறுபடிற் றுமஞ்சலேனோ ?

"கோக்கண்டு மன்னர் குரைகடற் புக்கிலர் கோகநகப்
பூக்கண்டு கொட்டியும் பூவா தொழிந்தில பூதலமேழ்
காக்கின்ற மன்ன கவியொட்டக் கூத்தனின் கட்டுரையாம்
பாக்கண் டொளிப்பர்க ளோதமிழ்ப் பாடிய பாவலரே"

என்ற தூக்குத் தூக்கற்பாலதே. தாதுக்களைக் கொண்டு பதமுடிபு கண்டு "முடித்தற்கரிய வென்பாரு முளர்; முடிப்பான் பக்கம் வலியுடைத்து" எனவுரையாசிரியர் பெருந்தேவனார் கூறியுள்ளாரன்றே ? இசனுற் குசைநுனிமதிகொடு பிரிக்கவகையறியாரே, அங்ஙனம் அரியவெனக் கூறுமவரென்ப தங்கை நெல்லியங்கனியிற் போதரும். இதுநிற்க, ஐரவபாடையினுந் தேர்ந்து பட்டம்பெற்று வடமொழிப் பயிற்சியுங் கொண்டுற்ற தாம், ஆங்கிலத்தாரியற்றி யெழுதாவெழுத் தேற்றிய நன்முறைக ளொப்பவே தாதுபதார்த்த விளக்க வகராதி யொன்றியற்றி வெளிப்படுத்தல் சாலநலமும் நீடூழி பெயர் நின்று நிலவுகற் கேதுவுமாம். அங்ஙனஞ் செய்தல், பட்டாசாரியர் மோக்சமூலர் முதலியோ ரியற்றியனவும், இலிங்க பட்டீயமும், சிலப்பதிகாராதிகளிற் பகுதிப் பொருளுரையொடு காட்டப்பட்டனவும் வீரசோழியத் தங்ஙனே தெரிக்கப்பட்டனவும், தொல்காப்பியத்துற்றனவும்,

"விளக்கப் படுதலான் விளக்கெனப் படுமே"
"ஆழ முடையதா ழாழி யெனப்படும்"
"அவாவற வளித்தலா னறமெனப் படுமே"
"ஏயன் விகுதி யெய்தும் பிள்ளைக்கே"

எனலாதியவாப் பேரகத்தியமென வழங்குமதுவும், அறுவகை யிலக்கணம் எழாமிலக்கணம் என்னுமவையும், மேலும் பலவற்றொடு நாளதுகாறுஞ் சென்னையாதிய தலங்களினின்றும் பல்வகைப் பரீக்ஷைகட்குப் பற்பல பண்டிதர்கள் வெளியிட்ட வுரைக்கணமும், ஆறுமுக நாவலரவர்கள் சௌந்தர நாயகம்பிள்ளை யவர்களாதியோர் அச்சிட்ட விலக்கணங்களிற் காணும் பகுபத முடிபுகளும், வேறும் பல்வேறு வகையினுற்ற வகையுங் கண்டோர்ந்தாய்ந்த தமக்கு மிகச் சுலபமாம். கீழேகாட்டிய எம்மூர்ப் பெரிய சந்திரசேகரம்பிள்ளை யவர்கண் முடித்து வைத்திருக்கும் பகுபத விளக்கமாஞ் சொற்பொருளாய்ச்சியும் கண்ட சாமோதரம்பிள்ளை யவர்கள் ஐயரொருவரோடு சேர்ந்து முடித்து வைத்திருப்பதாயும் எமக்கெழுதிய கவிக்சடிதங்கள் சிலவற்று ளொன்றின் அச்சிடுவதாக விருப்பின் எமக்கனுப்புவதாக வாக்களித்திருந்த அச்சொற் பொருளாராய்ச்சி முடிவும், யாழ்ப்பாணத்துப் பண்டித ரொருவர் தாதுப்பொருட் காரணங்காட்டி அச்சேற்றி யிருக்கும் சூடாமணி நிகண்டும் பெற்றுக்கோடல் நெடுநாட் சிரமத்திடைப்படுத்தாது விரைவின் வெளிப்படுத்தற்கா முதவியாமன்றோ ? இங்ஙனம் தமது ஞாபகக் களஞ்சியத் துற்றவும் யோசிக்க வுடன் வெளியாமவையுஞ் சேர்ந்தாமல்லோ மெனல் குறையன்றே. வேண்டுற்ற இத்தகையதோரகாதி சௌசரியமுற்ற சம்போலியரா னன்றே வெளிவந்து நிலவவேண்டுவது ? இம்முயற்சியிற் பிரவேசித்து ஊக்கமுடன் சம்பூர்ணமாக்கிப் புத்தக ரூபமாய் வெளிப்படுத்தற்குத் தக்க பல வநுகூலங்களையும் எம்பெருமான் கிருபை பாலிக்குக தமக்கென வன்னேன் திருவருளை யிரந்து பிரார்த்திக்கின்றேம்.

சி. வீரா. சாமிநாத பிள்ளை.

# REVIEWS OF BOOKS.

## புத்தகக் குறிப்புக்கள்.

### திருவிளையாடற்புராண சங்கிரகம் :

[இது அ. வேணுவனலிங்கம்பிள்ளையவர்கள் பாளையங்கோட்டை ஸி. எம். எஸ். அச்சுக்கூடத்திற் பதிப்பித்தது. இதன் விலை தபாற்கூலி யுள்பட அணா 5.]

இருநூற்று நாற்பது பாடல்களானியன்ற இச்செய்யுணூல் பரஞ்சோதி முனிவர் இயற்றியருளிய திருவிளையாடற் புராணத்தின் சாரச்சுருக்கமாம் ; **மகா-௱ ௱-ஸ்ரீ, வே. ஷண்முகம் பிள்ளையவர்கள்** இயற்றியது ; ஸ்ரீலஸ்ரீ வள்ளிநாயக சுவாமிகள் எழுதிய நூன்முகமுடையது ; பல வித்வான்களாலும் சிறப்பித் துரைக்கப்பெற்றது. இதன்கட் கடவுள் வாழ்த்துமுதல் மூர்த்தி விசேட மிறுதியாகவுள்ள 15 பாடலும் நால்வகையாப்பு விகற்பங்களாணியன்றன ; மற்று நூன் முழுதும் ஒரே வகையான எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தத்தானியன்றுளது. இவ்வாறன்றி யிடையிடையே வெவ்வேறு வகையான யாப்பு விகற்பங்கள் விரவி வந்திருப்பின் மிக்க இன்பம் பயக்குமென்பது எமது துணிபு. இனி இது நிற்க, நூன்முழுதும் பத்திச் சுவையுடைத்தாமாறு நூலைப்படித்துக் காணத்தக்கது. திருவிளையாடற் புராணத்தின்கட் கூறப்பட்ட விடயங்களுளொன்றும் விடப்பெறாது யாவும்

அடங்குமாறு செறித்துக் கூறப்பட்டுள்ள தன்மை மிகவும் பாராட்டற்குரியதே. செய்யுட்களெல்லாம் ஓசையின்பங் கெடாமல் மிக்க செவ்விவாய்ந்து செல்லுகின்றன. புத்தகத்தினிறுதியில் 'திருவருள் வியப்பு' என்று தலைக்குறியிட்டுக்கூறிய 10 பாடல்களும் மிக்க அழகும் இனிமையும் வாய்ந்தனவாம். ஈற்றில் அச்சிடப்பட்டுள்ள திருவிளையாடல் அட்டவணையும் பாண்டிய ராஜர்களின் நாமாவளியும் மிகப்பயன்படற்பாலன. நல்ல பளப்பளப்புள்ள கடிதத்திற் பெரிய எழுத்துக்களில் யாவரும் விரும்பத்தக்கவாறு இந்நூல் பிரசுரிக்கப்பட்டுளது.

## ப்ரீதலை : ஓர் உழவன் மகள் :

[இது சென்னைச் சடகோபாசாரியர் அண்டு கம்பெனியார் வெ. நா. ஜுபிலி அச்சுக்கூடத்தில் அச்சிட்டு வெளிப்படுத்தியது; விலை அணா 8. தபாற்கூலி வேறு.]

இந்நூல் 'வித்தியாரண்ய நகரம்' என்ற நூலும் 'நன்றியறியா மகன்' என்ற நூலும் இயற்றியவராகிய மகா-௱-௱-ஸ்ரீ த. ரா. ஸ்ரீநிவாஸஐயங்கார், பி. ஏ., இயற்றியதோர் சரித்திர விநோத கதை; துங்கபத்திரா நதீதீரத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த விஜயநகர ராஜ்யத்தைப்பற்றியது. இதில் வருணிப்பதற்கென எடுத்துக்கொண்ட கட்டங்கள் யாவும் நல்லனவே; அவற்றுட் சில மிக்க அழகுபெறப் புனைந்து காட்டப்பட்டுள. ஆதிமுதல் அந்தம்வரை, கதை யினிமைபெற அமைந்துளது. இதன்கண்ணே தலைவியாகிய ப்ரீதலையின் குணப்புனைவு மிகவும் நன்றாயிருக்கின்றது; யாவருள்ளத்தையுங் கவரத்தக்கது. இவ்வசனநூல் யாவருக்கும் பொருள் விளங்கத்தக்க தெளிவான தமிழ் நடையில் எழுதப்பட்டுளது; எனினும் இறுதி 20 பக்கங்களினும் எழுத்துப்பிழைகள் அதிகமாயிருக்கின்றன. அவை அவசரப்பட்டு அச்சிட்டமையான் நேர்ந்தனபோலும்; மறுபதிப்பிலாயினும் அவற்றைக் களைந்து விடல்வேண்டும்.

## நூதன வாசக புத்தகங்கள் :

[இவை லண்டன் நியூயார்க் முதலிய இடங்களிலுள்ள லாங்குமன்ஸ் கிரீன் புத்தகச் சங்கத்தார் பதிப்பித்தன; சென்னை அட்கின்ஸன் கம்பெனியாரிடத்திலகப்படும். விலை : முதல் வகுப்புப் புத்தகம்-3 அணா; இரண்டாம் வகுப்புப் புத்தகம்-3 அணா; மூன்றாம் வகுப்புப் புத்தகம் $3\frac{1}{2}$-அணா; நான்காம் வகுப்புப் புத்தகம் $4\frac{1}{2}$-அணா. இவை யனைத்திற்குந் தபாற்கூலி வேறு.]

இந்த நூதன வாசகபுத்தகங்கள் தமிழ் கற்கும் முதல் நான்கு வகுப்பு மாணாக்கர்கட்கும் உபயோகபபடக் கூடியவண்ணம் எழுதப்பட்டுள. இந்நான்கு புத்தகங்களுள் முதலிரண்டு வகுப்புப் புத்தகங்களைப்பற்றி முன்னரே நமது பத்திரிகையில் இரண்டு வெவ்வேறு சஞ்சிகைகளில் விரித்தெழுதியிருக்கின்றோம்; ஆதலின் அவ்விரண்டுமொழிந்த ஏனைய இரண்டு வகுப்புப் புத்தகங்களையும் பற்றிக் கூறுகின்றோம். முதற்கண் நமது லாங்குமன்ஸ் சங்கத்தார் பதிப்புக்களெல்லாம் எப்பொழுதுங் கண்கவர் வனப்பினவாம்; நல்ல பளபளப்புள்ள கடிதத்திற் பெரிய எழுத்துக்களில் அவைகள் அச்சிடப்பட்டிருக்குந்தன்மை படிக்கும் மாணாக்கர்கட்குப் பேருக்கத்தை விளைக்குமெனபதன்கண் ஐயப்பாடே யில்லை. நல்லுடை யில்லாரை ஞாலம் மதியாதன்றே! மற்று நூல்களுட் கூறப்பட்ட விஷயங்கள் யாவும் குறித்தவகுப்பு

மாணாக்கர் திறத்திற்கேற்றனவே; விஷயங்களும் பல்வேறு வகையனவாய் மாணாக்கர்க்குச் சுவை விளைக்கத்தக்கன; ஆங்காங்குக் காணப்படுஞ் சித்திரப் படங்களும் மிக்கசெவ்விவாய்ந்தன. விஷயக்கடுமை கருதியே நூல்களிற் பாடங்களின் வைப்புமுறை யேற்பட்டுளதேயன்றிச் சொற்கடுமையாதல் நடைக்கடுமையாதல் கருதியன்று. இஃது உற்றுநோக்குவார் யாவர்க்குந் தெற்றெனப் புலனாம். மாணாக்கர்கள் பாஷை நூல்கள் கற்பது விஷயவுணர்ச்சிப் பயனோடு பாஷாஞானப்பயனுங் கருதியேயாம். ஆதலின் முற்பட்டுப்போந்த பாடங்களினும் பிற்படப் போதரும் பாடங்கள் சொல்லமைதி, நடையமைதிகளினும் முதிர்ந்துகொண்டே செல்லுதல் வேண்டும். இக்கருத்து யாவருக்கும் ஒப்ப முடிந்ததே. இவ்வாறே மூன்றாம் வகுப்புப் புத்தகத்தின் நடைக்கும் நான்காம் வகுப்புப் புத்தகத்தின் நடைக்கும் வேறுபாடு மிகவுங் காணப்படவேயில்லை. இவ்வொரு குறையும் நீக்கப்படுமாயின் பொன்மலர் நாற்றமுடைத்தாதல் போலும். மேலும் சென்னைப் பள்ளிக்கூடப் பாடபுத்தக நியமன சபையாரால் இந்நூல்களனைத்தும் அங்கீகரிக்கப்பட்டுள வென்பதே அவை மிகச்சிறந்தன வெனபதற்குப் போதிய சான்றாம். இது நிற்க. நமது பள்ளிக்கூடங்களில் இவ்வாசக புத்தகங்கள் பாடமாக வைக்கப்படுமென நம்புகின்றோம்.

---

## EDITORIAL NOTES.
## பத்திராதிபர் குறிப்புக்கள்.

---

**கற்றறிமூடர்:**—உலகத்தில் எந்த மூலையிலே கொண்டுபோய் வைத்தாலும், அங்கேயுந்தன்னைச் சுற்றியிருக்கின்ற நிலைமைகளனைத்தையும் உள்ளவாறே யறிந்து, ஆண்டுள்ளார் யாவர்க்கும் ஒப்பப்பயன்பட்டு மேதக்க மனிதனென்று எத்தகையோருங் கொண்டாடத்தக்கவாறு ஒழுக வல்லோனே கற்றறிந்தவனெனப்படுவான். இதுவே கல்வியின் மெய்ப்பொருள், இதுவே யதன் மெய்ப்பயன். இதற்கென்றே அது பெரியோர்களான் ஏற்பட்டதூஉமென்க. பிறபாஷைகளி னுணர்ச்சியும், இறந்த காலத்தில் நிகழ்ந்த விஷய ஞானமும், பயனற்ற விஷயங்களுட் பலவற்றை மூளையுட் புகுத்துதலும் கல்வியின்பாற்படா. இவற்றினகண் தலையிட்டுழலுவோர் கற்றறிமூடர்களே யல்லரோ?

**தன்னைத்தானறிதல்:**—ஒவ்வொருவனுந் தன்னைத்தானுணர்த லெவ்வாறு? எனறுஞ் சிந்தனையாலன்று, செய்கையாலேயே. தன்றன கடமையைச்செய்ய முயன்றால், ஒவ்வொருவனும் உடனே தன்னைப்பற்றிய மெய்ம்மதிப்புடையனாய்த் தன்னைத்தானறிவான். அங்ஙனம் அவன கடமை செய்தற்கண் உணமையும் விடாமுயற்சியு முடையோனாகுக; உயர்நிலையாளர் தன்மாட்டு அருள்கூரத் தககவாறும, வல்லாளர் தன்மீது தயவு வைக்கத் தக்கவாறும், நற்றொழிலாளர் தனக்கு உதவி செய்யத்தக்கவாறும் பலர் தன்னைப் பக்ஷமாய் நடத்தத் தக்கவாறும், பிறர் ஒவ்வொருவருந் தன்மீது அன்புபாராட்டத் தக்கவாறும ஒழுகுதல் வேண்டும். இதுவே கடமை செய்தற்கண் யாவருங் கவனிக்கவேண்டியது. வாய் மட்டுமே புள்ளாங்குழலை வாசித்தலியலாது; அதனோடு விரலியக்கமுஞ் சேர்தல் வேண்டும்.

தனது ஆற்றல்களையறிந்து அவற்றை மிதமாக முன்னுணர்ச்சியோடு உபயோகிக்கும் வல்லமையுடையானே உலக வாழ்க்கையில் தான் மேற்கொண்ட கடமைகளைக் கடைக்கூட்டி முடிப்பான். அங்ஙனம் முடிப்போனே தன்னைத்தானுணர்ந்தோன்.

**மெய்யுணர்ச்சி வேட்கை** :—ஒருவன் ஒவ்வொரு பொருளிலுமுள்ள நன்மையாவ திஃதெனக்கண்டு அதனை மதிக்குமிடத்தேயே அவனது மெய்யுணர்ச்சி வேட்கை வெளியாகின்றது. ஒவ்வொருவனுந் தனது கொள்கைகளை வெளியிடுமிடத்து விதிமுகத்தான் அவற்றை வெளிப்படையாக விளங்கக் கூறுதல் வேண்டும்; மற்று மறைமுகத்தாற் றமது கொள்கைகளைக் குறிப்பாகப் பிறர் ஐயுறத்தக்கவாறு கூறுவார் பலருளர். இவ்வாறன்றி விளங்கக் கூறுவோரே மெய்யுணர்ச்சி வேட்கையுடையாரெனக. பேரறிவாளர்க்கு இன்றியமையாதது மெய்யுணர்ச்சி வேட்கையேயாம்.

**தம்வயமுடைமை** :—தம்மைத் தாம் அடக்கியாள முடியாதவாறு நமதுள்ளத்தைத் தன்வயப்படுத்த வல்லதெதுவும் அழிவுபயக்கற்பாலதாதலின் அதற்கிடங்கொடுத்த லடாதென்க. "தன்னைத்தா னெஞ்சங் சரியாகத் தானடங்கிற், பின்னைத்தா னெய்தாப் பயனில்லை—தன்னைக், குடிகெடுக்கு நெஞ்சிற்குக் குற்றேவல் செய்யிற், பிடிபடுக்கப் பட்ட களிறு" என்ற அறநெறிச்சாரமுடையார் கூற்று நம்மவா யாவருஞ் சிந்தனை செய்யற்பாலதன்றோ?

**உயிருடையார்** :—பிறரிடத்து அன்பு பாராட்டுதலிற் களிப்பவரே யுயிருடையார்; மற்று அன்பு பாராட்டாதோரும், வேண்டா வெறுப்புடன் பாராட்டுவோரும், பிறர் பாராட்டுழித் தாங் கண்டு களியாதோரும் முதலாயினர் உயிருடையாராயினும் உயிரிலாரே.

**பக்தி வஞ்சகர்** :—பக்தி ஒரு கருவியாமேயன்றித் தானே யொரு பயனாதலில்லை; பக்தியால் ஆன்மாவின் கண் தூயவமைதி தோன்றும்; அது பேரறிவுடைமைக்குப் பெருங்கருவியாம்; ஆதலிற் பக்தியே யொரு தனிப் பெரும்பயனாகக் கொண்டு நடிக்குநருட் பெரும்பாலோர் வஞ்சகரென்றே கோடல் வேண்டும். இத்தகையார்க்குப் 'பக்தி வஞ்சகர்' என்று பெயரிடலாம்.

**சிறந்த நல்லதிர்ஷ்டம்** :—ஒருவனுக்கு நல்லதிர்ஷ்டமாவனவனைத்தினுஞ் சிறந்தது அவன் தனது குறைகள் யாவும் நிரம்பப்பெற்றுக் குறறங்களெல்லாங் களையப்பெறுதலாம். ஆகவே பிறர் தனது குற்றங்குறைகளையெடுத்துக் காட்டியவழி, அங்ஙனஞ் செய்தமை பற்றி அவர் பால் நன்றி கூறுதலொழிந்து இயல்பு திரிந்து ஒருவன பிறிதுபட வொழுகுவானாயின, அவனை யறிவுடையோர் பித்தனென்றெள்ளுவாரே யன்றி மேவறனறு.

**ஜாதிபேதம்** :—நமது இந்தியாவின்கண்ணே ஜாதி பேதங்களிருத்தலாற் பல கேடுகளும் தீங்குகளும் விளைகின்றனவெனபதும், அப்பேதங்கள் யாவும் நியாய விருத்தமென்பதும், அவை கடிதிற் களையப்படல்வேண்டுமென்பதும் நம்மவருட் படித்தவர் பலருக்குற்ற கொள்கைகளாம். அன்னார் கொள்கைகளை வலியுறுத்துவான் 'இந்துஜன சமூகச் சீர்திருத்தக்காரன' என்னும் ஆங்கிலப் பத்திரிகை சில காரணங்கள் காட்டுகின்றன. அவையாவன :—(1) மக்களனைவரும் சகோதரரென வாழல்வேண்டுமென்ற கடவுள் விதியொடு மாறுபடுதல் (2) மக்களாவார் தமக்குள்ளே ஒழுகவேண்டிய நீதி

முறைமையோ டொவ்வாமை (3) ஒற்றுமை நீங்கியுட்கலகங்கள் பல உண்டாதல் (4) தன்னலநாட்டம் மேலிட்டு வியாபகவுணர்ச்சி குன்றிப் பிறர்மாட்டு அநுதாபங் குறைதல் (5) நாட்டிலுள்ளாரனைவரையு மொருங்குகூட்டி யொரே வகுப்பினராய் ஒத்துவாழலைத் தடுத்தல் (6) தீயவழக்கங்கள் பல கிளைத்தோங்கி மக்களின் உடல் வன்மையைக் குறைத்தல் (7) திமிர்வாதம் பாரிசவாயுமுதலிய நோய்கட்கு ஆளாயினார்போல, நம்மவரது உள்ளத்தினாற்றல்கட்கு இபக்கமில்லாதவாறு அவற்றை யடக்கி, அவர்களை விலங்கனையராக்குதல் (8) நாமனைவரும் ஒருமைப்பாடிழந்து என்றென்றும் புறத்தேயத்தினராளுகைக் கீழிருந்து அன்னார் குடிச்சனங்களாயினமை முதலியனவாம். இக்காரணங்களனைத்தையும் நம்மவராவார் சீர்தூக்கி யராய்ந்து நல்வழிநாடி யொழுகுவாராக.

**இராமநாதபுரம் மகாராணியார் பெண் பாடசாலை** :—இப்பெயருள்ளதோர் பெண்பாடசாலை மதுரைமாநகரத்தின் கண்ணே இராமநாதபுரம் சேதுபதியவர்களின் பட்ட மகிஷியாரால் ஏற்படுத்தப்பட்டு நடந்துவருகின்ற தென்பதைப் பத்திரிகைகளிற் படித்துக் களிப்படைந்தோம். இப்பாடசாலையிற் படிக்கும் பெண் பிள்ளைகளின் தொகை வரவர மிகுந்து கொண்டே வந்து எடுத்த முயற்சி கைகூடிற்றென்று சொல்லத்தக்கவாறு இப்பள்ளிக்கூடம் ஓங்கிச்சிறப்பதாக. இறுதியில் இஃது ஒரு பெரிய பெண்டிர் கலாசாலையாகவும் பரிணமித்து விளங்கும்படி இறைவன் திருவருள் புரிவாராக.

**பஞ்சம்** :—முன்னினும் இப்போது பஞ்சக்கொடுமை குறைந்து வருகிறதாகச் சில பத்திரிகைகள் கூறுகின்றன. துரைத்தனத்தார் ஏற்படுத்தியிருக்கும் கஞ்சித்தொட்டிகட்கு உணவினிமித்தம் வருவார் தொகை வரவரக் குறைந்துக்கொண்டே வருகிறதெனக் கேட்டுக் களிப்படைகின்றோம்; எனினும் இவ்வாறு தொகை குறைவது பஞ்சத்தொலைவிற்குற்ற அறிகுறியேயோவென்று சிலர் ஐயுறுவாராயினார். ஜெயபுரத்தரசர் இந்திய பஞ்ச நிவாரண சங்கத்திற்கு இன்னும் நான்கு லக்ஷம் ரூபாய் நன்கொடையாக அளித்தனரென்பது அவ்வையுறவை வலியுறுத்துவதாகாதோ?

**காங்கிரேஸ் மகாசபை** :—பிரதி வருஷமும் நடப்பது போலக் காங்கிரெஸ் இந்த வருஷம் கல்கத்தாவில் நடக்கப்போகின்றது. அதற்கேற்ற முயற்சிகளும் ஆங்காங்கு நிகழ்கின்றன. நமது தென்னிந்தியாவினின்றும் கனவான்கள் பலர் அம்மகாசபையின கூட்டத்திற்குப் பிரதிநிதிகளாவும் காணுநர் கேட்குநர்களாகவுஞ் செல்வார்களென்று எண்ணுகின்றோம். நம் இந்தியாவின் தலைநகராகிய அவ்வூர்க்காட்சியி னிமித்தமேனுஞ் செல்லுவார் அக்கூட்டத்தைக் கவனியாதிரார். அக்கூட்டத்தில் **தீன்ஷா இடல்ஜீவாச்சா** என்னும் பார்சீ கனவான் சபாநாயகராக வீற்றிருப்பா ரென்பதுகேட்டு மகிழ்வார்கள் அநேகர்.

**தென்னாபிரிகா யுத்தம்** :—இந்த யுத்தந்தொடங்கி யேறக்குறைய ஈராண்டுகட்கு மேலாகின்றன. இன்னும் அது நின்றபாடில்லை. கீரைத்தண்டு பிடுங்க எலேலப்பாட்டா? இச்சிற்றிராச்சியமாகிய திரான்ஸ்சுவாலைப்பிடிக்க இத்துணை நாளா? ஒருவேளை நம்முடைய ஆங்கில வீரர்கள் கருணைத்திறங்காட்டி யொழுகுகின்றனரோ? கையிற் படைக்கலங்கொண்டு போர்க்களத்திற் புக்கபிறகு கண்ணோடி நடப்பதுமுண்டோ? மகாபாரத யுத்தத்தில்

வீரர் சிங்கமாகிய அருச்சுனன் கருணை மேலிடப்பெற்றுப் போர்செய்தற்கண் ஊக்கங்குறைந்து பேசுவானாக, அப்போது கண்ணபிரான் அவனுக்குப் பகவற்கீதையை யுபதேசம் பண்ணி மேற் கொண்ட கடமையைச்செய்து முடிக்குமாறு வலியுறுத்துரைத்தாற் போல, இப்போது நம் ஆங்கில வீரர்கட்கும் அவ்வாறு எடுத்துரைப்பா ரொருவருமிலரோ? யுத்தம் நீடித்து நடந்தால் யாவருக்கும் அதன்கட் சுவை குறைந்துபோதல் இயல்புதானே. புறத்தேயிருந்து யுத்தமுடிவைமட்டிற் கவனிப்பாரிடத்திலேயே இவ்வாறாயின், யுத்த களத்திலேயே யிருந்து இரண்டு வருஷங்களாகப் போர்புரிவார்க்குச் சுவைக்குறைவு நிகழ்தல் இன்னும் அதிகமாமன்றே. ஆதலின் நமது கிச்சினர் பிரபுவவர்கள் சின்னாண் முன்னர்த் தாம் விடுத்த கட்டளையை வற்புறுத்திப் போரைக்கூடிய சீக்கிரத்தில் முடித்து வெற்றி முரசம் முழங்குவாரென்று நம்புகின்றோம்.

**ஐரோப்பாகண்டத்திற் குழப்பம்:**—ஒரு பிரெஞ்சு வியாபாரிக்குத் துருக்கி தேசத்தாரால் நிகழ்ந்த நஷ்டத்தின் பொருட்டு அன்னார் அவனுக்கு ஈடுசெய்து கொடுக்க வேண்டுமென்று பிரெஞ்சு தேசத்தார் கேட்ட பொழுது துருக்கியரசன் அதற்கிணங்காமையாலே பிரான்சுக்கும் துருக்கிக்கும் மனஸ்தாப முண்டாய்விட்டது. கான்ஸ்டாண்டிநோபிலிலிருந்த பிரெஞ்சு ராயபாரியும் பாரிஸ் நகரத்திலிருந்த துருக்கராயபாரியும் முறையே அவ்வவ்விடம் விட்டு நீங்கிவிட்டனர். கேயல்லார்டு பிரபு வென்னும் சேனைத தலைவரின் கீழ் ஒரு பெரிய பிரெஞ்சுச் சைன்னியம் அடங்கியதோர் கப்பற்கூட்டம் துருக்கி தேசத்தைச் சேர்ந்த துறை முகங்களனைத்தையும் கைப்பற்றிக் கொள்ளுமாறு புறப்பட்டு வந்து அவற்றுட் சிலவற்றையுங் கைக்கொண்டது. இவ்வாறு எதிர்பார்க்கப்படும் இவ்யுத்தமானது எவ்வாறு முடியுமோ? அறிகிலேம். துருக்கி பிரான்சுக்கு இணங்கிவிட்டதாகவுங் கேள்வி.

**சென்னைச் சருவகலாசாலைக்குப் புதிய அவயவிகள் :**—வருஷா வருஷம் நமது சென்னைச் சருவகலாசாலைக்குப் புதிய அவயவிகள் தெரிந்தெடுக்கப்படுவது போல இவ்வருஷமும் இருவர் தெரிந்தெடுக்கப்பட்டுளர். இவ்வருஷம் பன்னிருவர் அவயவிப்பட்டம் பெற விரும்பி முனைந்து நின்றனர். அவர்களுள் ம-௱-௱-ஸ்ரீ, ம. விசுவநாத ஐயரவர்கள் பி. ஏ. பி. எல்லும் ம-௱-௱-ஸ்ரீ, டி. சங்கராய ரவர்கள், பி. ஏ. யும் தெரிந்தெடுக்கப்பட்டனர். முன்னவர் கடலூர்ச் சில்லா மஞ்சக்குப்பத்தில் முதல் வகுப்பு ஜில்லா முன்சிபாயிருப்பவர்; பின்னவர் காலஞ்சென்ற கீர்த்திமான் கோபாலராய ரவர்கள் குமாரரும் இராஜமகேந்திரபுரக் கலாசாலைப் புலவருமாவர். இவ்விருவரும் மேற்கூறிய அவயவிப்பட்டத்திற்கு எவ்வாற்றானுந் தகுதியுடையவர்களே.

**ஆப்கானிஸ்தானத்தின் நிலைமை :**—சின்னாண் முன்னர் ஆப்கானிஸ்தானத்தின் அமீராகிய **அப்துல்ரஹிமா** னவர்கள் காலஞ்சென்று விட்டமையால் அவரது மூத்த மகனாரும் பட்டத்திற்கு எவ்வாற்றானு முரியவருமாகிய **ஹபிபுல்லாகான் அவர்கள்** ஆப்கானிஸ்தானத்திற்குப் புதிய அமீராகப் பட்டாபிஷேகஞ் செய்யப்பட்டனர். இதுவிடயத்தில் நமதிராசப்பிரதிநிதியவர்களாகிய **கர்ஸன்பிரபு அவர்கள்** செய்த ஏற்பாடுகள் மிகவியக்கத் தக்கனவே. ஒருவேளை இப்பொழுது புதிய அமீராயிருக்கின்ற ஹபிபுல்லா

அவர்களது சகோதரருளொருவர் உருஷியா தேசத்துச் சக்கிரவர்த்தியார்து ஆதரவிலிருத்தலின் அவர் அன்னாரது உதவிபெற்றுப் போர்க்கு வந்தாலும் வரலாம் என்று பலர் எதிர்பார்த்திருந்தனர். இப்பொழுது ஆப்கானிஸ்தானத்திற் சாந்தமு மமைதியும் தலையெடுத்திருக்கின்றன. ஜனங்களுக்குள் முறுமுறுப் பொன்று மில்லையாம். மேலும் மாரிகாலம் நெருங்கிற்றாதலின் வாணிகச்சாத்துக்கள் பயணப்பட் டெழுவதற்கு ஏற்றகாலம் வந்துவிட்டமையானும் இராசாங்க விஷயங்கள் தவிரக் குடிகட்கு ஏனைய விஷயங்களும் காரியங்களும் ஏற்பட்டு விட்டமையானும் வருகிற வேனிற்காலம் வரையில் ஒருவகையான கலகமும் நாட்டின்கண் நிகழ்தற் கிடமில்லையென்பது திண்ணம். அன்றியும், புதிய அமீரின் குணங்களும் ஆட்சித்திறனும் மிகவும் பாராட்டற் பாலனவாம். ஜனங்கட்கும் அவர்மீது அன்பு மிகுந்துகொண்டே வருகின்றதாம். நம் இந்தியாவினின்றுஞ் சில மகம்மதிய கனவான்கள் அமீரவர்களைக் காணுதற் பொருட்டுச் செல்வார்களென்பது கேட்டு மகிழ்கின்றாம். இவையனைத்தும் நங்கருத்தை வற்புறுத்துமாறு காண்க.

சுதேசவர்த்தமானி:—1891ளு ஆகஸ்டுமீ 1உ முதல் இப்பத்திரிகை சிதம்பரம் சித்தாந்த வித்தியானுபாலன யந்திரசாலையில் மாதமொருமுறை பிரசுரிக்கப்பட்டு வருகின்றது.

நம் நாட்டு மொழியாய்ச் சிறந்த தமிழ்க்கல்வி வரவரக் குறைவுற்று வருதலால் அதன் வளர்ச்சிக்கு வேண்டும் சாதகங்களைத் தமிழ்நாட்டார் கைக்கொண் டொழுகும்படி தூண்டிப் போதித்தலும், ஆரிய வருணாச்சிரம தருமங்கள் நிலைகுலைந்து கெட்டுவருதலால் அவைகள் அபிவிருத்தி யடைதற்கு வேண்டும் உபாயங்களை யெடுத்து இதமாக வுபதேசித்தலும், பிராசீன இந்துதேவாலய மடாலய தருமங்கள் வரவர மிக்ககேட்டிற் கிலக்காகுதலால் அவைகள் க்ஷேமம் எய்துதற்குவேண்டும் பரிபாலன முயற்சிகளைச் செய்யத்திடமாக வெடுத்துக் காட்டுதலும், இகபரத்துக்குரிய எல்லா நன்மைகளையும் அடைதற்குச் சாதனமான மானிட தேகத்தில் நாம் நோய் முதலியவற்றால் இடருறாது நீடிருந்து சுகவாழ்வு கூரும்படி சுகாதாரங்களைப் பேணுதற்கென்றே நியோகிக்கப்பட்ட நகரச்சபையார் தங்கடமையைச் சாக்கிரதையுற்று நடத்தி ஜனோபகாரிகளாய்ப் புகழாபரணம் பூணும்படி நியாயவழிகளை எடுத்துரைத்தலும், மகாகனம் பொருந்திய நமது பிரிட்டிஷ் அரசினர் கல்வியறிவாற்றலுடைய நீதி மன்னராய்த் தங்குடை நீழலில் நம்மை வைத்துப் பாதுகாத்திடலால் அவர் செங்கோன்மைப் பெருநன்றி மிகப்பாராட்டி மேலும் வேண்டும் இகபரக்ஷேமானுகூலங்களை நமக்குச் செய்துவர அவர்களைப் பிரார்த்தித்து வருதலும், இப்பத்திரிகையின் முக்கிய நோக்கமாம். இன்னும் நானாவித தேசவர்த்தமானங்களும், செய்தொழில் விருத்திக்கும் வர்த்தக விருத்திக்கும் வேண்டும் கல்வியறிவுகளும், இதில் எழுதப்படும். சிதம்பரச் செந்தமிழ்ச் சங்கவரலாறு மாசந்தோறும் இதில் வெளியாகும். சந்தாவிபரம் குறித்த செந்தமிழ்ச் சங்காபிமானிகளுக்கு ரூ. 0—12—0 மற்றவர்களுக்கு 1—0—0 கைப்பாப்பக்காரராக விரும்புவோர் அடியிற்கண்ட விலாசத்துக்குத் தங்கள் தெளிவான விலாசத்தை விரைவி லெழுதக்கடவர்:—சபாபதிநாவலர், மானேஜர், சுதேச வர்த்தமானிப் பத்திராதிபர், நெ. 77, செங்கழுநீர்ப் பிள்ளையார் கோவில்தெரு, சிதம்பரம்.

# Specimens of RUBBER STAMPS

MANUFACTURED BY THOMPSON & CO.,

*The City Rubber Stamp Makers, Broadway, Madras.*



No. 313—Rs. 2-8-0.




No. 303—Rs. 2-8-0.




No. 314—Rs. 2-8-0.




No. 309—Rs. 2-0-0.




No. 300—Rs. 3-0-0.




No. 304—Rs. 3-8-0.




No. 302—Rs. 2-0-0.




No. 306—Rs. 3-0-0.




No. 308—Rs 3-8-0.

ஒவ்வொரு டைரியிலும் நமது சக்கரவர்த்தியினுடைய உருவப் படம் மிக நேர்த்தியாய் அச்சிட்டு வைக்கப்பட்டிருக்கிறது.

### தாம்ஸன் அண்டு கம்பெனியார்

# மினெர்வா டைரிகள்.

அடுத்துவரும் 1902வருஷத்துக்கு அதி உபயோகமான சிறந்த விஷயங்களடங்கிய டைரிகள் விற்பனைக்குத் தயாராக விருக்கின்றன.

| | |
|---|---|
| நெ. 1. ஆறுவித பாஷைகளில் அச்சிடப்பட்ட மினெர்வா பாக்கெட் டைரி 3 அங்குல அகலமும் $4\frac{1}{4}$ அங்குல நீளமும் உள்ளது. | 0 4 0 |
| ஷை 2. ஷை ஷை மடிப்பு உள்ளதும் பென்சல் வைக்கப்பட்டதுமான பாக்கெட் டைரி | 0 6 0 |
| 3. அதிக உபயோகமுள்ளதும் அவசியமான விஷயங்களடங்கியதும் 8 - அங்குல நீளமும் 5 - அங்குல அகலமும் உள்ளது. | 0 12 0 |
| 3. ஷை பக்கங்களுக்கிடையில் பிளாட்டிங் பேபர் வைத்தது | 1 0 0 |
| 4. அதிக உபயோகமும் அவசியமுள்ளதுமான விஷயங்களுடையதும் 10 - அங்குல நீளமும் 8 - அங்குல அகலமுமுள்ளதும் பக்கங்களுக்கிடையில் பிளாட்டிங் பேபர் வைத்தது. | 1 2 0 |
| 5. பூல்ஸ்காப் கடித அளவில் அச்சிடப்பட்டு நேர்த்தியாய்ப் பயிண்டு செய்யப்பட்டதும் அதிக உபயோகமும் அவசியமுமான விஷயங்கள் அடங்கியதும் 13-அங்குல நீளமும் 8-அங்குல அகலமும் உள்ளதும் பக்கங்களுக்கிடையில் பிளாட்டிங் பேபர் வைத்தது. | 1 4 0 |

மேற்கண்ட டைரிகளில் 1-வது 2-வது நெம்பர் டைரிகள் இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு, துலுக்கு, மலையாளம், கன்னடம் இந்த ஆறுவித பாஷைகளில் தேதிகள் அச்சிட்டிருப்பதோடும் இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு பாஷைகளில் பஞ்சாங்கம், 12-மாதத்து ராசி சக்கரம், அமிர்தயோகம் யோகினிநிலை, மகர சங்கராந்தி, ஆலயதரிசனம், ஆபரணம் அணிதல், ஆருடத்திற்கு, ஆந்தைக்காதல், உபநயனத்திற்கு, உழவுசெய்ய, எதிர்கொள்ளுதலிவை நன்மை தீமை யறியும் பயன், கருட தரிசனம், இராகுகாலம், கரிநாள், காது குத்தும் நாள், கிருகப்பிரவேசம், கோடியுடுத்தல், சீமந்தம், க்ஷௌரம், திக்குத்தும்பல், தேதிமழை, நிஷேக முகூர்த்தம், பயணஞ்செய்யும் தினம், செய்யாத்தினம், பல்லிவிழும் பலன், கௌரி பஞ்சாங்கம், முதலியவைகளும் அச்சிடப்பட்டிருப்பதனால் இஃது எல்லோருக்கும் சிறந்த உபயோகத்தைக் கொடுக்கும். இதுவரை வெவ்வேறிடங்களில் அச்சிடப்பட்ட டைரிகளைக்காட்டிலும் நூதனமும், அதிக விசேஷமுமான விஷயங்களும் அடங்கியிருக்கின்றன.

வேண்டுவோர் அடியிற்கண்டவிடத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

**தாம்ஸன் கம்பெனி,**

33, பிராட்வே, சென்னை.

PRINTED AT THE "MINERVA" PRESS, BROADWAY, MADRAS.